بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 3

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரஜப் 25

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஸுல்ஹ் 15 ★ 15 ஜனவரி 2026


## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ الَّذِيْنَ يُبَايِعُوْنَكَ اِنَّمَا يُبَايِعُوْنَ اللّٰهَ ؕ يَدُ اللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ ۚ فَمَنْ نَّكَثَ فَاِنَّمَا يَنْكُثُ عَلٰى نَفْسِهٖ ۚ وَمَنْ اَوْفٰى بِمَا عٰهَدَ عَلَيْهُ اللّٰهَ فَسَيُؤْتِيْهِ اَجْرًا عَظِيْمًا ﴿۱۱﴾

உம்மிடம் உடன்படிக்கை செய்து கொள்பவர்கள் அல்லாஹ்விடமே உடன்படிக்கை செய்கின்றனர். அல்லாஹ்வின் கை அவர்களின் கைகளின் மேல் உள்ளது. எனவே அந்த உடன்படிக்கையை முறிப்பவர், தமது தீங்கிற்காகவே அதனை முறிக்கிறார். அல்லாஹ்விடம் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுபவருக்கு நிச்சயமாக அவன் மாபெரும் நற்பலனை வழங்குவான். (48:11)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இமாம் மஹ்தியிடம் பனிமலையில் தவழ்ந்து சென்று பைஅத் செய்ய நேரிட்டாலும் பைஅத் செய்யுங்கள்

(நபிமொழி)

ஹஸ்ரத் ஸவ்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுடைய ஒரு கவூலத்திற்கு அருகில் மூன்று நபர்கள் சண்டையிடுவார்கள்.அவர்களில் ஒவ்வொருவரும் கலீஃபாவின் மகனாக இருப்பார். எனினும், அவர்களில் எவருக்கு கருவூலம் கிடைக்காது. பின்னர் கிழக்குப் பக்கத்திலிருந்து கருப்புக் கொடியை ஏந்தியவர் வெளிப்படுவர். மேலும், அவர்கள் உங்களை எவ்வாறு கொலை செய்வர் என்றால் இதற்கு முன்னர் எவரும் செய்திருக்க மாட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறு சில விஷயங்களையும் கூறியிருந்தார்கள். ஆனால், அவற்றை என்னால் நினைவில் வைக்க முடியவில்லை. அதன் பிறகு அன்னார் (ஸல்) கூறினார்கள்: எனவே நீங்கள் அவர் தோன்றியதை கண்டால் பின்னர் நீங்கள் பனிமலையில் தவழ்ந்து செல்ல நேரிட்டாலும் அவரிடம் சென்று பைஅத் செய்யுங்கள். ஏனெனில் அவர் அல்லாஹ்வின் கலீஃபாவாகவும், மஹ்தியாகவும் இருப்பார்.( இப்னு மாஜா, கிதாபுல் ஃபித்ன்)

## அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கான பைஅத் நிபந்தனைகள்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து……

(1) நான் மரணம் அடைகின்ற வரை ஷிரிக் என்னும் இறைவனுக்கு இணை வைப்பதிலிருந்து தவிர்ந்து கொள்வேன்

(2) பொய் ,விபச்சாரம், தீய பார்வை, கட்டுப்படாமை, தீமை அநீதி இழைத்தல், நம்பிக்கை துரோகம் செய்தல், குழப்பம் விளைவித்தல் கிளர்ச்சி செய்தல் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வேன். மன உணர்ச்சிகள் எந்த அளவு தீவிரமடைந்தாலும் அவற்றை மேலோங்க விடாது அடக்கிக் கொள்வேன்.

(3) இறைவனின் கட்டளையின்படியும் அவனுடைய தூதரின் கட்டளையின்படியும் ஐவேளைத் தொழுகைகளை விடாமல் நிறைவேற்றி வருவேன்.என்னால் இயன்ற வரை தஹஜ்ஜுத் என்னும் நடு இரவுத் தொழுகை, முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத் ஓதுதல் தினமும் எனது பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்பு கேட்டல் ஆகியவற்றில் தொடர்ந்து ஈடுபடுவேன் இறைவனின் பேருதவிகளை நெஞ்சார நினைவில் கொண்டு அவனை தினமும் புகழ்ந்து வருவேன்.

(4) அல்லாஹ்வின் அனைத்து படைப்பினங்களுக்கு பொதுவாகவும், முஸ்லிம்களுக்கு குறிப்பாகவும் எனது மன உணர்ச்சியின் காரணமாக நாவினாலோ கைகளில் வேறு வகையாலோ எவ்விதமான தகாத தொல்லையும் கொடுக்க மாட்டேன்.

(5) துக்கம், மகிழ்ச்சி, பணக்கஷ்டம், பண வசதி, இறைவனிடமிருந்து கிடைக்கும் அருள். அவனால் தரப்படும் சோதனை ஆகிய எந்த நிலையிலும் இறைவனிடம் மனம் கோணாமல் பற்றுள்ளவனாக இருப்பேன். இறைவனின் தீர்ப்பை எந்த நிலையிலும் உளப்பூர்வமாக ஏற்றுக்கொள்வேன். அவன் வழியில் எல்லா வகையான இழிவையும், இன்னல்களையும் ஏற்கத் தயாராக இருப்பேன் எத்தகைய தொல்லைகளுக்கு ஆளானாலும் முகம் சுளிக்காமல் முன்னேறிச் செல்வேன்.

(6) சடங்கு சம்பிரதாயங்களில் இருந்தும், மனத்தின் சொந்த விருப்பங்களை பின்பற்றுவதிருந்தும் தவிர்ந்து கொள்வேன். திருக்குர்ஆனின் ஆட்சிக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு இறைவனின் போதனையின்படியும் ,அவன் தூதரின் போதனையின்படியும் நடப்பதையே எல்லா நிலையிலும் எனது நடைமுறையாக ஆக்கிக் கொள்வேன்.

(7) தற்பெருமையையும், அகம்பாவத்தையும் முற்றாக விட்டு விடுவேன். பணிவு தன்னடக்கம், இனிய குணம் சகிப்புத்தன்மை, எளிமை இவற்றையே மேற்கொண்டு வாழ்க்கை நடத்துவேன்.

(8) மார்க்கம், அதன் கண்ணியம், இஸ்லாத்திற்கு தொண்டு செய்தல் ஆகியவற்றை எனது உயிர் ,பொருள் கண்ணியம், குழந்தைகள் உறவினர்கள் ஆகிய எல்லாவற்றையும் விட மிகவும் உயர்வாகக் கருதுவேன்.

(9) அல்லாஹ்வின் படைப்புகளாகிய எல்லாருக்கும் தொண்டு செய்வதில் எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் இறைவனுக்காகவே தொடர்ந்து ஈடுபட்டு இருப்பேன். அவனால் எனக்கு வழங்கப்பட்ட ஆற்றல்களாலும், அருள்களாலும் என்னால் முடிந்த வரை மனிதகுலம் பயன்பெறும் வகையில் பணியாற்றுவேன்.

(10) அல்லாஹ்வுக்காக நல்ல விஷயங்களில் நான் கட்டுப்படுவேன் என இந்த எளியவனிடம் (இமாம் மஹதி அலைஹிஸ்ஸலாம்)அவர்களிடம் நான் செய்து கொள்ளும் இந்த சகோதர உடன்படிக்கையில் மரணம் அடையும் வரை நிலைத்திருப்பேன் என்றும் மற்ற எல்லா உலகத் தொடர்புகளை விடவும் இந்த சகோதர உடன்படிக்கை மிகவும் உயர்ந்ததாக இருக்கும் என்றும் நான் உறுதி கூறுகிறேன்.

(இஷ்திஹார் தக்மீலே தப்லீஃக், ஜனவரி 12, 1889)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியீட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰہَ اِلَّا اللّٰہُ مُحَمَّدٌ رَّسُوۡلُ اللّٰہِ

## ஜல்சா ஸாலனாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்கு அஹ்மதிய்யத்தின் உண்மைத்துவதற்கான ஒளிமயமான அடையாளம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதிக் காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியின் வருகை குறித்து நற்செய்தி வழங்கியிருந்தார்கள். மேலும் அந்தக் காலத்தில் ஏராளமான ஒளிமயமான அடையாளங்கள் வெளிப்படும் என்ற வாக்குறுதியும் வழங்கியிருந்தார்கள். அவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் வெளிப்பட்டும் இருக்கின்றன. உண்மையான இமாம் மஹ்தியின் அடையாளம் இவ்வாறு இருக்கும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்.

அதாவது அக்காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திர கிரகணம் ஏற்படும். அதாவது சந்திர கிரகணத்திற்கான குறிப்பிட்ட தேதிகளில் முதலாவது இரவிலும், மேலும் ரமலானுடைய மாதத்திலேயே சூரிய கிரகணத்திற்கான குறிப்பிட்ட தேதிகளில் மத்திய நாட்களிலும் கிரகணம் ஏற்படும் என்று கூறியிருந்தார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்! இந்த அடையாளம் 1894 ஆம் ஆண்டு முழுமையடைந்துவிட்டது. இதேபோன்று, தோன்றவிருக்கின்ற இமாம் மஹ்தியை மக்கள் ஒப்புக் கொள்ளாதபோதும், மேலும் ஏளனப்படுத்தும் போதும் தண்டனையாக அக்காலத்தில் பிளேக் நோய் பரவும் என்றும் அன்னார் (ஸல்) கூறியிருந்தார்கள்.

ஆக, இந்த பிளேக் நோய் 1902 ஆம் ஆண்டு பரவியது அதில் லட்சக்கணக்கான மக்கள் மரணத்திற்கு இரையாகினர். பிளேக் நோய் பரவியபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் தடுப்பூசி எடுத்துக் கொள்வதிலிருந்து இறைவன் எனக்கு தடை விதித்துள்ளான். மேலும் நான் தடுப்பூசி போடாமல் இருந்தாலும், பிளேக்கிலிருந்து பாதுகாப்பாக இருப்பேன்; மேலும் எனது எதிரிகள் மாண்டு போவார்கள் என்று கூறியிருந்தான். அது அப்படியே நிகழ்ந்தது. ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் ஏராளமான எதிரிகள் பிளேக் நோயால் மாண்டு போயினர். மேலும் தடுப்பூசி போடாதபோதும் அன்னார் ( அலை) பாதுகாப்பாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்: உண்மையான இமாம் மஹ்தியின் ஓர் அடையாளம் இதுவாக இருக்கும். அதாவது அக்காலத்தில் சிலுவையின் பொய்யான கொள்கைகள் பெரும்பாலும் பரவிவிடும். மேலும், சிலுவையின் பொய்யான எண்ணங்களை தோன்றக்கூடிய இமாம் மஹ்தி மிக அழுத்தமாக ரத்து செய்வார்கள். இமாம் மஹ்தி வருகை தந்த போது ஆங்கிலேயர்களின் கிறிஸ்துவ அரசாங்கத்தின் ஆதிக்கம் உலகின் பெரும் பகுதியில் இருந்தது. அவர்கள் சிலுவை சிந்தனைகள், மஸீஹ் இறைவனாக இருக்கின்றார் மேலும் அவர் விண்ணில் உயிருடன் இருக்கின்றார் போன்ற தங்களது வாதங்களை தமது பாதிரிகளின் மூலமாக முழு உலகிலும் பரப்பிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் ஒளிமயமான சான்றுகளால் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் மரணத்தை அறிவித்து கிறிஸ்தவர்களின் அனைத்து பொய்யான சிந்தனைகளையும் அழித்து விட்டார்கள். இதுவே அன்னாரின் உண்மைத்துவத்திற்கான மகத்தான சான்றாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையான இமாம் மஹ்தியின் ஓர் அடையாளமாக இதனையும் கூறியிருந்தார்கள். அதாவது அவரது காலத்தில் ஒட்டகம், ஆடுகள், சிங்கம் ஒரே தடாகத்திலிருந்து தண்ணீர் அருந்தும் என்றும் கூறியிருந்தார்கள்.

இன்று இந்த அடையாளமும் நிறைவேறி விட்டது. அதாவது, தங்களை சிங்கமாக கருதி வந்த உயர் வகுப்பைச் சேர்ந்த அந்த மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களை ஆடு, மாடுகளாக கருதி அவர்கள் மீது அனைத்து அநீதிகளையும் இழைத்துக் கொண்டிருந்தனர். இன்றைய காலத்துச் சட்டங்களுக்கு ஏற்ப அவர்கள் அனைவரும் சம உரிமை படைத்தவர்களாக இருக்கின்றார்கள். மேலும் அனைவரும் ஒன்றாக உண்ணுகிறார்கள்; பருகுகின்றார்கள்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எடுத்துரைத்த அந்த அடையாளங்கள் எண்ணற்றவையாகும். அவை அனைத்தும் இன்று பிரகாசமான சூரியனைப் போன்று முழுமை அடைந்திருக்கின்றன.

இன்று இந்த உரையாடலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுக்கேற்ப மற்றோர் அடையாளமும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

உண்மையான இமாம் மஹ்தியின் ஓர் அடையாளம் இதுவாக இருக்கும் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அதாவது அக்காலத்தில் அன்னார் மீது கிழக்கில் ஈமான் கொள்ளக்கூடியவர்கள், மேற்கில் வசிக்கக்கூடிய தமது சகோதரர்களின் முகங்களை பார்ப்பார்கள். மேலும் கிழக்கில் வசிக்கக் கூடியவர்கள், மேற்கில் வசிக்கக்கூடிய தங்களது சகோதரர்களின் முகங்களை பார்ப்பார்கள். இந்த முன்னறிவிப்பிலிருந்து நமக்கு இந்த விஷயம் தெரியவருகின்றது. அதாவது உண்மையான இமாம் மஹ்தியின் காலத்தில் அவரை ஏற்றுக் கொண்ட அனைவரும் உலகில் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும் பரவியிருப்பார்கள். மேலும் அவர்களால் ஒருவர் மற்றவரை பார்க்க முடியும்.

கூறினார்கள்:

اِنَّ الْمُؤْمِنَ فِیْ زَمَانِ الْقَائِمِ وَ هُوَ بِا الْمَشْرِقِ

لَیَرٰی اَخَاهُ الَّذِیْ فِی الْمَغْرِبِ

وَ کَذَا الَّذِیْ فِی الْمَغْرِبِ یَرٰی اَخَاهُ الَّذِیْ فِی الْمَشْرِقِ

பொருள்: இமாம் மஹ்தியின் காலத்தில் நம்பிக்கை கொண்ட சகோதரர்கள் கிழக்கில் இருப்பார்கள்; அவர்கள் மேற்கில் வசிக்கக்கூடிய தங்களது சகோதரர்களை பார்க்க முடியும்; அதேபோன்று மேற்கில் வசிக்கக் கூடியவர்கள் கிழக்கில் வசிக்கக்கூடிய தங்களது சகோதரர்களை பார்க்க முடியும். (பஹாருல் அன்வார், ஷேக் பாகர் அல்மஜ்லிஸி, பக்கம் 441)

இதேபோன்று உக்தருத் தர்ஃபீ எழுதுகின்றார்கள்:

عَنْ مُحَمَّدْ اِبْنِ عَلی الْبَاقِرْ عَلَیْهِ السَّلَامُ قَالَ یُنَادِیْ مُنَادٍ

مِنَ السَّمَآءِ بِاِسْمِ الْمَهْدِیْ فَیَسْمَعُ مَنْ بِالْمَشْرِقِ

وَمَنْ بِالْمَغْرِبِ حَتّٰی لَا یَبْقٰی رَاقِدٌ اِلَّا اسْتَیْقَظَ

அதாவது முஹம்மது இப்னு அலீ பாக்கர் (ரஹி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஓர் அழைப்பாளர் விண்ணிலிருந்து பெயரை குறிப்பிட்டு அழைப்பார்; அந்தக் குரலை கிழக்கில் இருப்பவரும், மேற்கில் இருப்பவரும் ஒவ்வொரு நபரும் கேட்பார். எந்த அளவுக்கு என்றால் தூங்கிக் கொண்டிருக்கக் கூடிய ஒவ்வொருவரும் விழித்து விடுவார்.

அல்ஹம்துலில்லாஹ்! இந்த முன்னறிவிப்பும் ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் (அலை) அவர்களின் காலத்தில் முழுமையடைந்துள்ளது. மேலும் ஒரு நீண்ட காலமாக முழுமையாகிக் கொண்டிருக்கின்றது. உலகம் இதனை பார்க்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சொற்பொழிவாற்றுகின்றபோது, உலகின் பல்வேறு நாடுகளில் இருக்கக்கூடிய அஹ்மதிகளும், அஹ்மதி அல்லாதவர்களும் எம்.டி.ஏ-வின் மூலமாக ஒருவர் மற்றவரைக் கண்டு கொண்டிருக்கின்றார்கள். தற்போதும் கடந்த யூ.கே ஜல்ஸாவின் சந்தர்ப்பத்தில் பல நாடுகளைச் சார்ந்த அஹ்மதிகள் ஒருவர் மற்றவரை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

எனவே மிகவும் தெளிவாக முழுமை அடையக்கூடிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்புகள் நீதியை விரும்பக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமிற்கும் இந்த அழைப்பை விடுக்கின்றன. அதாவது அவர் தமது அன்பிற்குரிய நபியாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட இந்த முன்னறிவிப்பின் மூலமாக வெளிப்படக் கூடிய அன்னாரின் அந்த உண்மைத்துவத்தை சீர்தூக்கி பார்க்க வேண்டும். மேலும் இறைவனின் முன்னிலையில் ஆஜராகுவதற்கு முன்பாகவே அவற்றின் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும் அந்த உண்மையான இமாம் மஹ்தி தோன்றி விட்டால்,பின்னர் பனிமலையில் தவழ்ந்து செல்ல உங்களுக்கு நேரிட்டாலும் நீங்கள் அவரிடத்தில் நிச்சயம் செல்ல வேண்டும்; அவர்களிடத்தில் பைஅத் செய்ய வேண்டும் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட வேண்டும்; (அபூதாவூத்). மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப அமல் செய்ய வேண்டும்

நிறைவாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கீழ்க்கண்ட மேற்கோள்களை எடுத்துரைத்து நான் இந்த உரையாடலை நிறைவு செய்கின்றேன். இந்த மேற்கோளும் உண்மையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு வலிமையான சான்றாகும். இந்த மேற்கோள் ஹுஸூர் அன்வர் (அலை) அவர்கள் 1890 ஆம் ஆண்டு எழுதிய அந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. அப்போது அந்த அடையாளங்கள் எல்லாம் வெளிப்பட்டிருக்கவில்லை. தற்போது மேலே குறிப்பிடப்பட்ட அந்த அடையாளங்கள் எல்லாம் அப்போது முழுமை அடைந்திருக்கவில்லை. மேலும் கிழக்கிலும், மேற்கிலும் அன்னாரை ஏற்றுக் கொண்டவர் எவரும் இருந்திருக்கவில்லை. தற்போது முழு உலகிலும் அஹ்மதிய்யத் பரவி இருக்கின்றது. ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மக்களின் உள்ளங்களில் இந்த ஒளி இறங்கிவிட்டது. இந்த மேற்கோளை படிக்கக்கூடியவர்கள் சுயமே அன்னாரின் உண்மைத்துவத்திற்கான அடையாளத்தை புரிந்து கொள்ள முடியும்.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த எளியவன் நேர்மை மற்றும் உண்மையுடன் இறைவன் புறமிருந்து வந்துள்ளான். எனவே நீங்கள் உண்மைத்துவத்தின் அடையாளத்தை எல்லா பக்கமும் காண்பீர்கள். அந்தக் காலம் தொலைவில் இல்லை; இன்னும் கூறப்போனால், மிக அருகில் இருக்கின்றது. அதாவது நீங்கள் வானவர்களின் படைகள் விண்ணிலிருந்து இறங்குவதை பார்ப்பீர்கள். மேலும் ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் மக்களின் உள்ளங்களில் இறங்குவதை பார்ப்பீர்கள். எனவே நீங்கள் அந்த அடையாளத்திற்காக காத்திருங்கள். (இஸ்லாத்தின் வெற்றி பக்கம் 13, அடிக்குறிப்பு)

உள்ளத்தில் இறையச்சம் இருக்கும் என்றால்

ஓர் அடையாளம் போதுமானதாகும்.

* * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரில் நிகழ்ந்த சம்பவங்களின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின்**

**பரிசுத்த வாழ்க்கை வரலாறு**

தபூக் போரில் பின்தங்கியவர்கள் மீது அல்லாஹ் தனது கடும் கோபத்தை வெளிப்படுத்தியிருப்பது இதிலிருந்து தெளிவாகிறது. அவர்கள் கெட்ட நடத்தை உள்ளவர்கள் என்று அறிவித்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்துவதற்கும், அவர்களது கப்ருக்குச் சென்று துஆ செய்வதற்கும் தடை விதித்துவிட்டான். மேலும், எதிர்காலத்தில் இவர்கள் எந்த திட்டத்திலும், போரிலும் பங்கேற்கக் கூடாது என்ற தடையும் விதிக்கப்பட்டது

நான் அன்னாரிடம் சென்றேன். நான் ஸலாம் சொன்னபோது, கோபத்திலிருப்பவர் புன்னகைப்பதைப் போல அன்னார் (ஸல்) புன்னகைத்தார்கள். பின்னர், முன்னால் வா! என்றார்கள். நான் நடந்து சென்று அன்னாரின் முன் அமர்ந்தேன். 'உம்மைத் தடுத்தது எது? நீ வாகனம் வாங்கவில்லையா?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களைத் தவிர உலகத்தில் வேறு எவரிடமாவது நான் அமர்ந்திருந்தால், ஏதேனும் காரணத்தைக் கூறி அவரது கோபத்திலிருந்து தப்பித்திருப்பேன் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனக்குப் பேச்சுத் திறமை உள்ளது. ஆனால் நான் நன்கு அறிந்த விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று நான் தங்களிடம் ஏதேனும் பொய்யைச் சொல்லித் தங்களைத் திருப்திப்படுத்தினாலும், விரைவில் அல்லாஹ் தங்களை என் மீது கோபமடையச் செய்துவிடுவான். நான் தங்களிடம் உண்மையைச் சொன்னால், அதனால் நீங்கள் என் மீது கோபமடைவீர்கள்; ஆனால் அதில் அல்லாஹ்வின் மன்னிப்பை நான் எதிர்பார்க்கிறேன் என்று ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறினார்கள்

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 நவம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **28ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

தபூக் பயணம் தொடர்பான கூடுதல் விவரங்களை இன்று எடுத்துக் கூறுவேன். இவை தொடர்பாக கடந்த குத்பாக்களிலும் எடுத்துரைக்கப்பட்டன. ஏற்கனவே விவரிக்கப்பட்டது போல, சில நயவஞ்சகர்கள் போருக்குச் செல்ல மறுத்து, பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறியிருந்தனர். அன்னார் (ஸல்) மதீனா திரும்பிய பிறகும் நயவஞ்சகர்கள் பயணம் மேற்கொள்ளாததற்குக் கூறிய காரணங்கள் மற்றும் சாக்குப்போக்குகள் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன; திருக்குர்ஆனிலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயணத்திலிருந்து மதீனா திரும்பும்போது, முதலில் பள்ளிவாஸலுக்குச் சென்று இரண்டு ரக்அத் தொழுகை நிறைவேற்றுவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையாக இருந்தது. அதன்படி, அன்னார் தபூக்கிலிருந்து திரும்பியபோது, முற்பகல் நேரத்தில் மதீனாவுக்குள் நுழைந்தார்கள். முதலில் பள்ளிவாஸலுக்குச் சென்று இரண்டு ரக்அத் தொழுகையை நிறைவேற்றினார்கள். நான் கூறியது போல, அன்னார் (ஸல்) எப்போது பயணத்திலிருந்து திரும்பினாலும் இவ்வாறே செய்வார்கள். நஃபில் தொழுகையை முடித்த பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாஸலிலேயே அமர்ந்தார்கள். மக்கள் அன்னாரைச் சந்திக்கவும், காணவும் வரத் தொடங்கினார்கள். அதேபோல், பலவீனமான ஈமான் மற்றும் நயவஞ்சகத்தின் காரணமாகப் போருக்குச் செல்லாதவர்களும் வரத் தொடங்கினார்கள். தங்கள் நம்பிக்கைகள் தவிடுபொடியானதால், மேற்கொண்டு அவமானத்திலிருந்தும், வெட்கத்திலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள குறிப்பாக நயவஞ்சகர்கள் வரத் தொடங்கினார்கள். அவர்கள் சத்தியம் செய்து பல்வேறு சாக்குப்போக்குகளை முன்வைத்தனர். இவர்கள் ஏறக்குறைய எண்பது பேர் இருந்தனர் என்று வரலாற்று ஆசிரியர்கள் எழுதுகிறார்கள்.

ஆனால் இதை விட அதிகமானவர்கள் இருந்தனர் என்று சில அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களின் வெளிப்படையான காரணங்களை ஏற்றுக்கொண்டு, அவர்களிடம் பைஅத் வாங்கினார்கள். அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரி துஆச் செய்தார்கள். அவர்களின் உள்நோக்கத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்தார்கள். ஆனால் இந்த நயவஞ்சகர்களின் குற்றம் மன்னிக்க முடியாததாக இருந்தது. (ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4418)

எனவே, 'இவர்கள் எப்படிப்பட்ட அசுத்தமான மக்கள் என்றால் இனி இறைவன் இவர்களிடம் ஒருபோதும் திருப்தி அடைய மாட்டான்' என்று அல்லாஹ் வஹீ மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவித்துவிட்டான்.

ஆகவே, இவர்களைக் குறித்து அல்லாஹ் சூரா தவ்பாவில் இவ்வாறு கூறுகிறான்:

يَعْتَذِرُوْنَ اِلَيْكُمْ اِذَا رَجَعْتُمْ اِلَيْهِمْ ؕ
قُلْ لَّا تَعْتَذِرُوْا لَنْ نُّؤْمِنَ لَكُمْ
قَدْ نَبَّاَنَا اللّٰهُ مِنْ اَخْبَارِكُمْ ؕ
وَسَيَرَى اللّٰهُ عَمَلَكُمْ وَرَسُوْلُهٗ
ثُمَّ تُرَدُّوْنَ اِلٰى عٰلِمِ الْغَيْبِ وَالشَّهَادَةِ
فَيُنَبِّئُكُمْ بِمَا كُنْتُمْ تَعْمَلُوْنَ ﴿۹۴﴾
سَيَحْلِفُوْنَ بِاللّٰهِ لَكُمْ اِذَا انْقَلَبْتُمْ
اِلَيْهِمْ لِتُعْرِضُوْا عَنْهُمْ ؕ فَاَعْرِضُوْا عَنْهُمْ ؕ
اِنَّهُمْ رِجْسٌ ۫ وَّمَاْوٰىهُمْ جَهَنَّمُ ۚ
جَزَآءًۢ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ ﴿۹۵﴾
يَحْلِفُوْنَ لَكُمْ لِتَرْضَوْا عَنْهُمْ ۚ
فَاِنْ تَرْضَوْا عَنْهُمْ فَاِنَّ اللّٰهَ لَا يَرْضٰى
عَنِ الْقَوْمِ الْفٰسِقِيْنَ ﴿۹۶﴾

நீங்கள் (போர் செய்துவிட்டு) அவர்களிடம் திரும்பி வரும்போது, அவர்கள் உங்களிடம் (பல்வேறு வகையான) சாக்குப் போக்குகள் கூறுகின்றனர். நீர் அவர்களிடம் கூறுவீராக! நீங்கள் சாக்கு போக்குகளைக் கூறாதீர்கள். நாங்கள் உங்கள் சாக்குப் போக்குகளை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அல்லாஹ் உங்கள் உண்மை நிலைகளைப் பற்றி எங்களுக்கு அறிவித்து விட்டான். அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் உங்கள் செயல்களைக் கவனித்துக் கொண்டே இருக்கிறார்கள். பின்னர் நீங்கள் மறைவானதையும் வெளிப்படையானதையும் அறியக்கூடிய இறைவனிடம் திரும்பக் கொண்டு செல்லப்படுவீர்கள். அப்போது அவன் உங்கள் செயல்களின் உண்மை நிலையைப் பற்றி உங்களுக்கு அறிவிப்பான். நீங்கள் அவர்களிடம் திரும்பும்போது, அவர்களிடம் கண்டும் காணாதது போன்று நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அவர்கள் உங்கள் முன் அல்லாஹ்வின் மீது சத்தியங்கள் செய்வார்கள். (ஆகவே நாமும் உங்களிடம் கூறுகின்றோம்:) நீங்கள் அவர்களைப் புறக்கணித்து விடுங்கள். (ஏனென்றால்) நிச்சயமாக அவர்கள் தூய்மையற்றவர்களாவர். அவர்களின் செயல்களுக்குத் தண்டனையாக நரகமே அவர்களின் தங்குமிடமென்று ஏற்கனவே முடிவாகிவிட்டது.

நீங்கள் அவர்களைப் பற்றித் திருப்தியடைவதற்காக அவர்கள் உங்கள் முன் சத்தியங்கள் செய்வர். நீங்கள் அவர்களைப் பற்றித் திருப்தியடைந்தாலும் மோசமான நடத்தையுடைய மக்களிடம் அல்லாஹ் திருப்தியடைவதில்லை. (9:96.97)

தபூக் போரில் பின்தங்கியவர்கள் மீது அல்லாஹ்

தனது கடும் கோபத்தை வெளிப்படுத்தியிருப்பது இதிலிருந்து தெளிவாகிறது. அவர்கள் கெட்ட நடத்தை உள்ளவர்கள் என்று அறிவிக்கப்பட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, இவர்களுக்காக ஜனாஸா தொழுகை நடத்துவதற்கும், இவர்களது கப்ருக்குச் சென்று துஆ செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் இவர்கள் எந்த திட்டத்திலும், போரிலும் பங்கேற்கக் கூடாது என்ற தடையும் விதிக்கப்பட்டது.

இது குறித்து அல்லாஹ் கூறுகிறான்:

. (போருக்கு செல்லாமல்) பின் தங்கிவிட்டவர்கள் அல்லாஹ்வின் தூதருக்குப் பின்னால் தங்கள் இடத்தில் அமர்ந்திருப்பதில் மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் தங்கள் பொருள்களையும், தங்கள் உயிர்களையுங் கொண்டு அல்லாஹ்வின் வழியில் போர் செய்வதை வெறுத்தனர். கடும் வெயிலில் (போர் செய்வதற்கு) பயணம் மேற்கொள்ளாதீர் எனக் கூறினர். நீர் (அவர்களிடம்), நரக நெருப்பு (இந்த வெயிலை விடவும்) மிகக் கடினமானதாகும் என்று கூறுவீராக! அந்தோ! அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமே! எனவே அவர்கள் சம்பாதித்துக் கொண்டதற்கு கூலியாக அவர்கள் குறைவாகச் சிரிக்க வேண்டும். அதிகமாக அழ வேண்டும். பின்னர், அல்லாஹ் அவர்களுள் ஒருசாராரிடம் உம்மைத் திருப்பிக் கொண்டு வந்து, அவர்கள் (வருங்காலத்தில் ஏதாவதொரு) போருக்குச் செல்வதற்கு உம்மிடம் அனுமதி கோரினால், நீர் அவர்களிடம் (வருங்காலத்தில் போருக்காக) என்னுடன் ஒருபோதும் வெளியேற மாட்டீர்கள். ஒருபோதும் நீங்கள் என்னுடன் இணைந்து பகைவருடன் போரிடமாட்டீர்கள்; (ஏனென்றால்) நிச்சயமாக நீங்கள் முதன் முறை (பின்தங்கி) உட்கார்ந்திருப்பதில் திருப்தியடைந்து விட்டீர்கள். எனவே பின்தங்கியிருப்பவர்களுடன் நீங்களும் உட்கார்ந்திருங்கள் என்று கூறுவீராக. அவர்களுள் எவர் மரணமடைந்து விட்டாலும் அவருக்காக நீர் ஒருபோதும் ஜனாஸா தொழுகை தொழ வேண்டாம். அவரது கல்லறையில் துஆ செய்ய நிற்கவும் வேண்டாம். ஏனென்றால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நிராகரித்தனர். மேலும் அவர்கள் தீய நடத்தையுடைய நிலையிலேயே மரணமடைந்தனர். அவர்களுடைய பொருள்களும், அவர்களுடைய பிள்ளைகளும் உம்மை வியப்பிற்குள்ளாக்க வேண்டாம். அல்லாஹ் அவற்றின் மூலம் அவர்களுக்கு இவ்வுலகில் தண்டனை கொடுக்கவும், அவர்கள் நிராகரிப்பவர்களாக இருக்கின்ற நிலையிலேயே அவர்களின் உயிர்கள் பிரியவுமே நாடுகிறான். (9:81 - 85)

இவையும் சூரா தவ்பாவின் வசனங்கள் ஆகும். தபூக் போரில் பின்தங்கியவர்கள் நான்கு வகையினராக இருந்தனர்.

முதல் வகையினர், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க, ஏதேனும் கடமையை நிறைவேற்றுவதற்காகப் பின்தங்கிய பாக்கியசாலிகள். உதாரணமாக, ஹஸ்ரத் அலீ (ரலி) இப்னு உம்மே மக்தூம் மற்றும் முஹம்மது பின் மஸ்லமா போன்றோர்.

இரண்டாம் வகையினர், உடல் ஊனமுற்றவர்கள், நோயாளிகள், பலவீனமானவர்கள். இவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். வாகனம் போன்ற வசதிகள் இல்லாதவர்கள். இவர்களுக்கு உண்மையான காரணம் இருப்பதால், அல்லாஹ் இவர்களை மன்னித்தருளினான் என்று அல்லாஹ்வே கூறியுள்ளான். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, 'அவர்கள் ஒவ்வோர் இடத்திலும் நம்முடனேயே இருந்தார்கள்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவர்களைக் குறித்துக் கூறினார்கள். அதாவது, அல்லாஹ் இவர்களை கூலியிலும், நன்மையிலும் நம்முடன் சேர்த்துக் கொண்டான் என்று கூறியிருந்தார்கள்.

மூன்றாம் வகையினர், நயவஞ்சகர்கள். இவர்களது நடத்தை கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. இவர்களுடன் என்றென்றும் கோபம், கடும் தண்டனை மற்றும் எச்சரிக்கை குறித்த கட்டளை திருக்குர்ஆனில் இறக்கப்பட்டுள்ளது. நான்காம் வகையினர், வெறும் சோம்பேறித்தனத்தின் காரணமாகப் போரில் கலந்து கொள்ளாமல் பின்தங்கியவர்கள்.

இவர்களில் குறிப்பாக மூன்று ஸஹாபிகள் குறிப்பிடத்தக்கவர்கள்: ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி), ஹஸ்ரத் முராரா பின் ரபீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா (ரலி) ஆகியோர். இந்த மூன்று ஸஹாபிகளைக் குறித்து திருக்குர்ஆனில் சூரா தவ்பாவின் இந்த வசனம் இறங்கியது:

பொருள்:

மேலும் (போருக்குச் செல்லாமல்) பின்தங்கிய அந்த மூன்று நபர்களின் பாவமன்னிப்பை ஏற்றுக் கொண்டு அல்லாஹ் அவர்களை மன்னித்தான். பூமி விசாலமாக இருந்தும் அவர்களுக்கு அது குறுகிவிட்டது; அவர்களின் உயிர்களும் அவர்களுக்கு நெருக்கடிக்குள்ளாயின. அல்லாஹ்விடமிருந்து தப்பிக்க அவனையன்றி வேறு புகலிடம் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். பிறகு, அவர்கள் பாவமன்னிப்பு கேட்க வேண்டும் என்பதற்காக அவன் அவர்கள் மீது கருணையுடன் திரும்பினான். நிச்சயமாக அல்லாஹ் மீண்டும் மீண்டும் மன்னிப்பவனாகவும், கருணை காட்டுபவனாகவும் இருக்கிறான். (9:118)

பின்தங்கிய அந்த மூன்று நபர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்களின் சம்பவ விவரம் இவ்வாறு வருகிறது.

புஹாரியின் ஓர் அறிவிப்பில், ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களே இந்த முழு சம்பவத்தையும் விவரித்துள்ளார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கலந்துகொண்ட எந்தப் போரிலும் பின்தங்கியதில்லை; தபூக் போரைத் தவிர. பத்ர் போரிலும் நான் பின்தங்கியிருந்தேன்; ஆனால் அந்தப் போரில் கலந்து கொள்ளாதவர்கள் மீது அன்னார் (ஸல்) எந்தக் கோபத்தையும் வெளிப்படுத்தவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் குறைஷியர்களின் வியாபாரக் கூட்டத்தைத் தடுக்கும் நோக்கத்துடனேயே புறப்பட்டார்கள். ஆனால், போருக்கான முன்முடிவு இல்லாமலேயே அல்லாஹ் அவர்களை எதிரிகளுடன் மோதச் செய்துவிட்டான். இஸ்லாத்தில் உறுதியாக இருப்பதற்கான உடன்படிக்கை செய்துகொண்ட அகபா இரவிலும் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். பத்ர் போர் மக்களிடையே மிகவும் பிரபலமாக இருந்தபோதிலும் பத்ர் போரில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அகபா இரவிற்கு ஈடாகும் என்று நான் கருதவில்லை. அகபாவில் செய்துகொண்ட வாக்குறுதியும், பைஅத்தும் பத்ர் போரை விடப் பெரியது என்று அவர் கருதினார்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் தொடர்ந்து கூறுகிறார்கள்:

'தபூக் போரின்போது நான் இருந்ததைப் போன்று உடல் வலிமையுடனும், வசதியுடனும் அதற்கு முன்பு எப்போதும் இருந்ததில்லை. அந்த நேரத்தில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அந்த போரிலிருந்து பின்தங்கிவிட்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அதற்கு முன் என்னிடம் எப்போதும் இரண்டு ஒட்டகங்கள் சேர்ந்ததில்லை. ஆனால் அந்தப் போர் நடந்த காலத்தில் நான் இரண்டு ஒட்டகங்களைச் சேகரித்து வைத்திருந்தேன். பொதுவாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழக்கமாக எந்தப் போருக்குச் செல்ல விரும்பினாலும், அவர்கள் அதை இரகசியமாக வைத்திருப்பார்கள்; வேறு திசையை நோக்கிச் செல்வதாக வெளிப்படுத்துவார்கள்.

இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அன்னாரின் பொதுவான போர் உத்தியாக இருந்தது. ஆனால், இந்தப் போரின்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கடும் வெப்பத்தில் புறப்பட்டார்கள். நீண்ட தூரப் பயணம், குடியிருப்புகள் இல்லாத பாலைவனம் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான எதிரிகள் எனப் பல சவால்கள் இருந்தன. எனவே, அன்னார் (ஸல்) முஸ்லிம்களிடம் நிலைமையைத் தெளிவாக விளக்கிவிட்டார்கள்.

இங்கு அன்னார் (ஸல்) எதையும் மறைக்கவில்லை. மாறாக, மக்கள் இந்த தாக்குதலுக்குத் தேவையான ஆயத்தங்களை மேற்கொள்ள வேண்டும்; அதற்கான உரிமையை செலுத்த வேண்டும் என்பதற்காக நாம் இந்த போருக்கு செல்கிறோம் என்று அன்னார் (ஸல்) கூறிவிட்டார்கள்.

தாம் செல்லவிருக்கும் திசையையும் அன்னார் (ஸல்) அறிவித்தார்கள். எழுதப்படும் எந்தப் பதிவேடும் இத்தனைப் பேருக்கு இடமளிக்காது எனும் அளவுக்கு முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் புறப்பட்டார்கள்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் குறிப்பிட்டது, யாரெல்லாம் சென்றார்கள், யாரெல்லாம் செல்லவில்லை என்று குறித்துக் கொள்ளும் ரிஜிஸ்டர் ஆகும்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) கூறுகிறார்கள்: எந்த ஒரு நபரும் பின்தங்க விரும்பவில்லை. இருப்பினும், (அவர்களின் எண்ணிக்கை) எங்கும் எழுதப்படவில்லை என்ற போதிலும்,

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

(போருக்குச் செல்லாமல்) அவர் பின் தங்கியிருப்பது அன்னாரை விட்டு மறைவாக இருக்கும் என்று கருதவில்லை. ஏனெனில், அல்லாஹ்வின் வஹீ அவரைப் பற்றி இறங்கும் வரை, அது அன்னாரை விட்டு மறைவாக இருக்கும் என்று அவர் ஒருபோதும் கருதவில்லை. பழங்கள் பழுத்து, நிழல்கள் நன்றாக இருந்த நேரத்தில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தப் போரை மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், முஸ்லிம்களும் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள். நானும் அவர்களுடன் பயண ஏற்பாடுகளைச் செய்வதற்காகக் காலையில் செல்வேன். போருக்குச் செல்ல வேண்டும் என்ற உறுதியான எண்ணம் இருந்தது. ஆனால் எதையும் செய்யாமலேயே திரும்பி வருவேன்.

அதாவது, சோம்பேறித்தனம் இருந்தது; அதனால் ஆயத்தமாகாமல் இருந்தார்கள்.

என்னால் எப்போது வேண்டுமானாலும் தயாராக முடியும்; நாளை செய்து கொள்வேன் என்று என் மனதில் கூறிக் கொள்வேன். இந்த சிந்தனை என்னை பின்னடைய வைக்கவும், தாமதப்படுத்தவும் செய்தது. எந்த அளவுக்கென்றால், மக்கள் பயணத்திற்கு விரைவாக புறப்படக் கூடிய நேரமும் வந்தது. ஒருநாள் காலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால் நான் எனது பயண ஏற்பாடுகளில் எதையும் செய்து முடித்திருக்கவில்லை. அன்னார் (ஸல்) சென்றிருந்தாலும் ஓரிரு நாட்களில் தயாராகி, அவர்களைச் சென்று பிடித்துவிடுவேன் என்று நினைத்தேன். அன்னார் (ஸல்) சென்ற பிறகு மறுநாள் காலையில் பொருட்களை ஆயத்தம் செய்யச் சென்றேன்; ஆனால் எதையும் செய்யாமல் திரும்பி வந்தேன். அடுத்த நாளும் சென்றேன்; எதையும் முடிக்காமல் திரும்பினேன். இதே நிலை நீடித்தது. எந்த அளவுக்கென்றால், படை வேகமாகப் பயணித்து வெகுதூரம் சென்றுவிட்டது. நானும் புறப்பட்டு சென்று அவர்களை அடைந்து விடுவேன் என்று நினைத்தேன். அவ்வாறு செய்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். ஆனால் அதுவும் என்னால் முடியவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சென்ற பிறகு நான் வெளியே சென்று மக்களிடையே நடமாடும்போது, நயவஞ்சகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அல்லது அல்லாஹ்வினால் மன்னிக்கப்பட்ட பலவீனமானவர்களை மட்டுமே காண்பேன். இது எனக்கு மிகுந்த கவலையை கொடுத்தது.

தபூக்கை அடைந்த பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் என்னை நினைவு கூர்ந்தார்கள். மக்களுடன் அன்னார் தபூக்கில் அமர்ந்திருந்தபோது, 'கஅப் எங்கே?' என்று கேட்டார்கள். பனூ ஸலமாவைச் சேர்ந்த ஒருவர், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவரது இரண்டு ஆடைகள் மற்றும், அவர் தம் வலது மற்றும் இடது பக்கங்களை பார்த்துக் கொண்டிருத்தலும் அவரைத் தடுத்து வைத்துள்ளது என்று கூறினார்.

அதாவது, பெருமை மற்றும் ஆணவத்தின் காரணமாக அவர் வரவில்லை என்று கூறினார்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள், கஅப் விஷயத்தில் நீர் சொன்னது மிகவும் தவறான வார்த்தை ஆகும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர் விஷயத்தில் நாங்கள் நல்ல அனுபவத்தை மட்டுமே பெற்றுள்ளோம் என்று கூறினார். இதைக் கேட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மவுனமாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'அன்னார் திரும்பி வருகிறார்கள் என்ற செய்தி கிடைத்ததும் எனக்குக் கவலை ஏற்பட்டது. நாளை அன்னாரின் கோபத்திலிருந்து தப்பிக்க என்ன பொய்யான காரணத்தைச் சொல்லலாம் என்று யோசிக்கத் தொடங்கினேன். என் வீட்டிலிருந்த ஆலோசனைக் கூறக்கூடிய ஒவ்வொரிடமும் இது குறித்து ஆலோசனைக் கேட்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள் என்று கூறப்பட்டதும், என் மனதிலிருந்த பொய்யான எண்ணங்கள் அனைத்தும் மறைந்துவிட்டன. பொய்யைச் சொல்லி அன்னாரின் கோபத்திலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்தேன். எனவே, அன்னாரிடம் உண்மையைச் சொல்லத் தீர்மானித்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

அன்னார் (ஸல்) பயணத்திலிருந்து திரும்பினால் முதலில் பள்ளிவாசலுக்குச் சென்று இரண்டு ரக்அத் தொழுவது அன்னாரின் வழக்கம். பின்னர் மக்களைச் சந்திப்பதற்காக அமர்வார்கள். அன்னார் (ஸல்) அவ்வாறு அமர்ந்தபோது, (போரிலிருந்து) பின்தங்கியவர்கள் வந்து அன்னாரிடம் சாக்குப்போக்குகளைக் கூறவும், சத்தியம் செய்யவும் தொடங்கினார்கள். இவர்கள் எண்பதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் இருந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அம்மக்களின் வெளிப்படையான காரணங்களை ஏற்றுக்கொண்டு, அவர்களிடம் பைஅத் வாங்கி, அவர்களின் பாவமன்னிப்புக்காக துஆ செய்து, அவர்களின் உள்நோக்கத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்தார்கள்.

பிறகு நான் அன்னாரிடம் சென்றேன். நான் ஸலாம் சொன்னபோது, கோபத்திலிருப்பவர் புன்னகைப்பதைப் போல அன்னார் புன்னகைத்தார்கள். அதாவது, புன்னகை இருந்தது. ஆனால் அது கோபத்தையுடையதாக இருந்தது. பின்னர், முன்னால் வா! என்றார்கள். நான் நடந்து சென்று அன்னாரின் முன் அமர்ந்தேன். 'உம்மைத் தடுத்தது எது? நீ வாகனம் வாங்கவில்லையா?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களைத் தவிர உலகத்தில் வேறு எவரிடமாவது நான் அமர்ந்திருந்தால், ஏதேனும் காரணத்தைக் கூறி அவரது கோபத்திலிருந்து தப்பித்திருப்பேன் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனக்குப் பேச்சுத் திறமை உள்ளது. ஆனால் நான் நன்கு அறிந்த விஷயம் என்னவென்றால், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று நான் தங்களிடம் ஏதேனும் பொய்யைச் சொல்லித் தங்களைத் திருப்திப்படுத்தினாலும், விரைவில் அல்லாஹ் தங்களை என் மீது கோபமடையச் செய்துவிடுவான். நான் தங்களிடம் உண்மையைச் சொன்னால், அதனால் நீங்கள் என் மீது கோபமடைவீர்கள்; ஆனால் அதில் அல்லாஹ்வின் மன்னிப்பை நான் எதிர்பார்க்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. தங்களிடமிருந்து நான் பின்தங்கிய அந்த நேரத்தில் இருந்ததைப் போன்று உடல் வலிமையுடனும், வசதியுடனும் நான் எப்போதும் இருந்ததில்லை' என்று கூறினேன்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'இவர் உண்மையைச் சொன்னார்' என்று கூறினார்கள். 'எழுந்து செல்! அல்லாஹ் உன்னைக் குறித்துத் தீர்ப்பளிக்கும் காத்திரு! என்று கூறினார்கள்.

நான் எழுந்து சென்றேன். பனூ ஸலமாவைச் சேர்ந்த சிலரும் என்னைப் பின்தொடர்ந்து வந்தார்கள். 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! இதற்கு முன் நீர் எந்தக் குற்றமும் செய்ததாக நாங்கள் அறியவில்லை. பின்தங்கிய மற்றவர்கள் கூறியதுபோல நீங்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஏதேனும் சாக்குப்போக்கு சொல்லியிருக்கக் கூடாதா? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உமக்காகப் பாவமன்னிப்புக் கோருவதே உமது பாவத்தை மன்னிக்கப் போதுமானதாக இருந்திருக்குமே!' என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் என்னைத் தொடர்ந்து குறை கூறிக் கொண்டே இருந்தார்கள்; எந்தளவிற்கென்றால், ஒருகட்டத்தில் என் எண்ணம் மாறிவிட்டது. நான் திரும்பிச் சென்று, 'முன்பு நான் சொன்னது தவறு என்று அன்னாருக்கு முன் ஏதேனும் சாக்கு போக்கு கூறலாம் என்று நினைத்தேன். அன்னாரிடம் சென்று ஏதேனும் சாக்குபோக்கு கூறி மன்னிப்பு கேளுங்கள் என்று என்னிடம் கூறியவர்களிடம், 'என்னைப் போன்று வேறு யாரேனும் இவ்வாறு ஒப்புக் கொண்டுள்ளார்களா? அல்லது உண்மையைச் சொல்லியிருக்கின்றார்களா?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ஆம்! இன்னும் இரண்டு பேர் உள்ளனர். அவர்களும் நீர் சொன்னதையே சொன்னார்கள்; உமக்குக் கிடைத்த பதிலே அவர்களுக்கும் கிடைத்தது' என்று கூறினார்கள். 'அவர்கள் யார்?' என்று நான் கேட்டேன். 'முராரா பின் ரபீ அம்ரி மற்றும் ஹிலால் பின் உமைய்யா வாகிஃபி' என்று கூறினார்கள். பத்ர் போரில் கலந்து கொண்ட இரண்டு நல்ல மனிதர்களை அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் இருவரும் எனக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தார்கள். மக்கள் அவர்களைப் பற்றிக் கூறியதும் நான் (வீட்டிற்குச்) சென்றுவிட்டேன். முஸ்லிம்கள் யாரும் எங்களுடன் பேசக்கூடாது என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தடுத்துவிட்டார்கள்.

அதாவது, சாக்குப் போக்குச் சொல்ல நான் திரும்பிச்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

செல்லவில்லை. மாறாக நான் வீட்டுக்குச் சென்று விட்டேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்களிடம் எங்களை ஒதுக்கி வைக்குமாறு செய்துவிட்டார்கள்.

அதாவது, போருக்குச் செல்லாமல் அன்னாரை விட்டு பின்தங்கியவர்களை மக்கள் தவிர்க்கத் தொடங்கினார்கள். அவர்கள் எங்களை முற்றிலும் அறியாதவர்களைப்போல மாறினார்கள். எந்த அளவுக்கென்றால், எனக்குப் பழக்கப்பட்ட இந்தப் பூமியே எனக்கு அந்நியமாகத் தோன்றியது. இந்த நிலையில் நாங்கள் ஐம்பது இரவுகள் இருந்தோம். என் தோழர்கள் இருவரும் கவலையுடன் வீட்டிலேயே முடங்கி அழுது கொண்டிருந்தார்கள். ஆனால் நான் அவர்களை விட இளையவனாகவும், சோதனைகளைத் தாங்கக்கூடியவனாகவும் இருந்தேன்.

நான் வெளியே சென்று முஸ்லிம்களுடன் தொழுகையில் கலந்து கொள்வேன்; கடைவீதிகளில் சுற்றித் திரிவேன்; ஆனால் யாரும் என்னுடன் பேசமாட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமும் செல்வேன். தொழுகைக்குப் பின் அன்னார் (ஸல்) அமர்ந்திருக்கும்போது அஸ்ஸலாமு அலைக்கும் என்று சொல்வேன். 'எனது ஸலாமுக்குப் பதிலளிக்க அன்னார் (ஸல்) தம் உதடுகளை அசைத்தார்களா? இல்லையா? என்று என் மனதில் கேட்டுக்கொள்வேன். ஓரக் கண்ணால் அன்னாரைப் பார்ப்பேன். அன்னாரின் அருகில் நின்று தொழுவேன். நான் தொழும்போது அன்னார் (ஸல்) என்னைப் பார்ப்பார்கள்; நான் அன்னாரைப் பார்க்கும்போது முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள். மக்களின் இந்த வெறுப்பு நீண்ட நாட்கள் நீடித்ததால், நான் மனம் நொந்து அபூ கதாதாவின் தோட்டத்துச் சுவரில் ஏறினேன்.

அதாவது அவர் வெளிப்படையாக தோட்டத்துக்கு கதவின் வழியே செல்லாமல் மறைந்து சென்றார்.

அவர் என் தந்தையின் சகோதரர் மகனும் எனக்கு மிகவும் பிரியமானவரும் ஆவார். நான் அவருக்கு ஸலாம் சொன்னேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் என் ஸலாமுக்குப் பதில் கூடச் சொல்லவில்லை. அபூ கதாதா! நான் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசிக்கிறேன் என்பது உமக்குத் தெரியுமா? என்று அல்லாஹ்வின் பெயரால் கேட்கிறேன்' என்று நான் கேட்டேன். அவர் அமைதியாக இருந்தார். மீண்டும் சத்தியம் செய்து கேட்டேன்; அவர் அமைதியாக இருந்தார். மீண்டும் சத்தியம் செய்து கேட்டபோது, 'அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கறிவர்' என்று கூறினார். இதைக் கேட்டு என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. நான் சுவரேறிக் குதித்துத் திரும்பி வந்தேன்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) கூறுகிறார்கள்: 'நான் மதீனாவின் கடைவீதியில் நடந்து கொண்டிருந்தபோது, சிரியா நாட்டிலிருந்து உணவு தானியங்களை விற்க வந்த ஒரு விவசாயி, 'கஅப் பின் மாலிக்கை எனக்கு யார் காட்டுவார்கள்?' என்று கேட்பதைக் கண்டேன். மக்கள் என்னைச் சுட்டிக் காட்டினார்கள். அவன் என்னிடம் வந்து, ஃகஸ்ஸான் மன்னன் அனுப்பிய ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில், 'உமது தோழர் உம்மிடம் கடுமையாக நடந்துகொண்டு உம்மை ஒதுக்கி வைத்துவிட்டார் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. இழிவுள்ள இடத்திலோ அல்லது வீணாக்கப்படும் இடத்திலோ அல்லாஹ் உம்மைப் படைக்கவில்லை. எம்மிடம் வாரும்; நாம் உம்மை உபசரிப்போம்' என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்ததும், 'இந்தக் கடிதம் இன்னொரு சோதனை' என்று நான் கூறினேன். ஏற்கனவே ஒரு சோதனையில் இருக்கும்போது, மன்னனிடமிருந்து ஆசை வார்த்தைகளுடன் வந்த இந்தக் கடிதம் மற்றொரு சோதனையாக இருந்தது. நான் அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு எரியும் ஓர் அடுப்பின் அருகே சென்று அந்தக் கடிதத்தை தீயில் எறிந்துவிட்டேன்.

ஐம்பது இரவுகளில் நாற்பது இரவுகள் கடந்த நிலையில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூதுவர் என்னிடம் வருவதைக் கண்டேன். 'உமது மனைவியை விட்டு விலகி இருக்குமாறு ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிடுகிறார்கள்' என்று அவர் கூறினார்.


நான் அவளைத் தலாக் சொல்ல வேண்டுமா? அல்லது என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டேன். 'அவளை விட்டு விலகி இரு; அவளை நெருங்காதே'! என்று அவர் கூறினார். எனது இரண்டு தோழர்களுக்கும் அன்னார் (ஸல்) இவ்வாறே செய்தி அனுப்பியிருந்தார்கள். நான் என் மனைவியிடம், 'உன் பெற்றோர் வீட்டுக்குச் செல்; அல்லாஹ் இது குறித்துத் தீர்ப்பளிக்கும் வரை அங்கேயே இரு! என்று கூறினேன்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) கூறுகிறார்கள்: 'ஹிலால் பின் உமைய்யாவுக்கும் இதே கட்டளைதான் இருந்தது. அவரின் மனைவி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! ஹிலால் பின் உமைய்யா மிகவும் வயதானவர்; அவருக்குப் பணியாளர் யாரும் இல்லை. நான் அவருக்கு சமையல் செய்து கொடுப்பது, துணிகளை துவைப்பது போன்ற சேவைகளைச் செய்வதைத் தாங்கள் வெறுப்பீர்களா?' என்று கேட்டார். அதற்கு அன்னார் (ஸல்) 'இல்லை! ஆனால் அவர் உம்மை நெருங்கக் கூடாது' என்று கூறினார்கள்.

அதாவது இந்த அளவுக்கு மட்டுமே சேவை செய்ய முடியும் என்றார்கள்.

அதற்கு, 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவருக்கு எதிலும் நாட்டமில்லை. அவருக்கு இந்த நிலை ஏற்பட்ட நாளிலிருந்து இன்று வரை அவர் அழுதுகொண்டே இருக்கிறார்' என்று அந்தப் பெண்மணி கூறினார்.

என் உறவினர்கள் சிலர் என்னிடம், 'ஹிலால் பின் உமைய்யாவின் மனைவிக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியது போல, நீங்களும் உங்கள் மனைவி உங்களுக்குச் சேவை செய்ய அன்னாரிடம் அனுமதி கேட்கலாமே?' என்று கூறினார்கள். அதற்கு நான், 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது குறித்து நான் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுமதி கேட்கமாட்டேன். ஹிலால் பின் உமைய்யாவோ வயோதிகர்; நான் இளைஞன் ஆவேன். அன்னார் (ஸல்) எனக்கு என்ன பதில் சொல்வார்கள்? என்று எனக்குத் தெரியாது என்று கூறினேன். இதற்குப் பிறகு நான் பத்து இரவுகள் காத்திருந்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுடன் பேசுவதைத் தடை செய்து ஐம்பது இரவுகள் பூர்த்தியாயிருந்தன. பேசுவதைத் தடை செய்து ஐம்பது நாட்கள் கழிந்து விட்ட பிறகு, ஐம்பதாவது இரவு கழிந்து (அடுத்த நாள்) காலை ஃபஜ்ர் தொழுதுவிட்டு, எனது வீடுகளில் ஒன்றின் மாடியில் அமர்ந்திருந்தேன். அல்லாஹ் விவரித்த அந்த நிலையிலேயே நான் இருந்தேன்; அதாவது என் உயிர் எனக்கு நெருக்கடியாகவும், பூமி விசாலமாக இருந்தும் குறுகியதாகவும் இருந்தது. அப்போது, 'கஅப் பின் மாலிக்கே! நற்செய்தி!' என்று ஸலஃ மலையின் மீது ஏறி ஒருவர் உரக்கக் குரல் கொடுப்பதைக் கேட்டேன். இதைக் கேட்டதும் நான் சஜ்தாவில் விழுந்தேன்; துன்பம் நீங்கிவிட்டது என்பதைப் புரிந்துகொண்டேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு, அல்லாஹ் கருணை புரிந்து எங்கள் தவறை மன்னித்துவிட்டான் என்று அறிவித்தார்கள்.




அதைக் கேட்டு மக்கள் எங்களுக்கு நற்செய்தி சொல்லத் தொடங்கினார்கள். என் இரு தோழர்களிடமும் நற்செய்தி சொல்பவர்கள் சென்றார்கள். ஒருவர் குதிரையை விரட்டிக்கொண்டு என்னிடம் வந்தார். அஸ்லம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் மலையின் மீது ஏறி குரல் கொடுத்திருந்தார். குதிரையை விட அவரது குரல் வேகமாக என்னை அடைந்தது.

அதாவது, ஒன்று அவர் குதிரையில் வந்தார். அவர் மேற்கொண்ட இன்னொரு வழிமுறை என்னவென்றால், மலை மீது ஏறி உரத்த குரலில் அறிவித்திருந்தார். யாருடைய குரலை நான் கேட்டேனோ அவர் என்னிடம் நற்செய்தி சொல்ல வந்தபோது, என் இரண்டு ஆடைகளையும் கழற்றி அவருக்குப் பரிசளித்தேன். ஏனெனில் அவர் எனக்கு நற்செய்தி கூறியிருந்தார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அப்போது என்னிடம் அந்த இரண்டு ஆடைகளைத் தவிர வேறு எதுவும் இல்லை. நான் வேறு இரண்டு ஆடைகளை இரவலாகப் பெற்று அணிந்து கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றேன். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, என் பாவமன்னிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்காக எனக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள். 'அல்லாஹ் உம் மீது கருணை கொண்டு உமது மன்னிப்பை ஏற்றுக் கொண்டதற்கு நல்வாழ்த்துகள்! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இறுதியில், நான் பள்ளிவாசலுக்குச் சென்றேன். அங்கே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்தார்கள்; அவர்களைச் சுற்றி மக்கள்

இருந்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்கள் என்னை நோக்கி ஓடி வந்து, என்னுடன் கைகுலுக்கி வாழ்த்துத் தெரிவித்தார். முஹாஜிர்களில் அவரைத் தவிர வேறு யாரும் என்னிடம் எழுந்து வரவில்லை. தல்ஹாவின் இந்தச் செயலை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொன்னபோது, அன்னாரின் முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது. 'உன் தாய் உன்னைப் பெற்றெடுத்த நாளிலிருந்து இன்று வரை உனக்குக் கிடைத்த நாட்களிலேயே மிகச் சிறந்த நாளிது; நற்செய்தி பெறுவாயாக!' என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது தங்களின் சார்பாகவா அல்லது அல்லாஹ்வின் சார்பாகவா?' என்று நான் கேட்டேன். 'அல்லாஹ்வின் சார்பாக!' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியடையும்போது அன்னாரின் முகம் சந்திரனின் துண்டு போலப் பிரகாசிக்கும்; அதை வைத்து அன்னாரின் மகிழ்ச்சியை நாங்கள் அறிந்துகொள்வோம். நான் அன்னாரின் முன் அமர்ந்து, 'அல்லாஹ்வின் தூதரே! எனது பாவமன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு நன்றியாக, எனது சொத்துக்கள் அனைத்தையும் அல்லாஹ்விற்கும், அவனது தூதருக்கும் ஸதக்காவாக அர்ப்பணிக்கிறேன்' என்று கூறினேன். 'உனது சொத்தில் சிறிது உனக்காக வைத்துக்கொள்; அதுவே உனக்கு நல்லது' என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். 'கைபரில் எனக்குள்ள பங்கை நான் வைத்துக் கொள்கிறேன்' என்று கூறினேன்.

' அல்லாஹ்வின் தூதர் அவர்களே! உண்மையின் காரணமாகவே அல்லாஹ் என்னைக் காப்பாற்றினான். நான் உயிரோடு இருக்கும் வரை எப்போதும் உண்மையே பேசுவேன் என்பது என் மன்னிப்பின் ஒரு பகுதியாகும். ஏனெனில், உண்மையைச் சொன்னதற்காக அல்லாஹ் என்னைச் சோதித்ததைப் போல, முஸ்லிம்களில் வேறு யாரையும் சோதித்ததாக நான் அறியவில்லை என்று நான் கூறினேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் உண்மையை விவரித்த அந்த நேரத்திலிருந்து இன்று வரை நான் வேண்டுமென்றே பொய் சொல்லவில்லை. நான் உயிருடன் இருக்கும் வரை அல்லாஹ் என்னைப் பாதுகாப்பான் என்று நம்புகிறேன். அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்கள் மீது பின்வரும் இந்த வஹீயை இறக்கினான்:

' நிச்சயமாக அல்லாஹ் நபி மீதும், முஹாஜிர்கள் மீதும், அவர்களுள் ஒரு சாராரின் உள்ளங்கள் தடுமாற்றத்திற்குள்ளான பிறகு ஏற்பட்ட கடினமான வேளையில் அவரை பின் தொடர்ந்த உதவியாளர்களுக்கும் அல்லாஹ் பேரருள் செய்துள்ளான். பின்னர் அவன் அ(ந்தப் பலவீனமான)வர்களுக்கும் அருள் செய்தான். நிச்சயமாக அவன் (நம்பிக்கை கொண்ட) அவர்களை நேசிப்பவனும் (அவர்களுக்கு) மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.'

இஸ்லாத்திற்குப் பிறகு அல்லாஹ் எனக்குச் செய்த அருட்கொடைகளில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் நான் உண்மையைச் சொன்னதை விடப் பெரிய நற்பேறு வேறில்லை. நான் அன்னாரிடம் பொய் சொல்லாதது இறைவனின் அருளே; இல்லாவிட்டால் பொய் சொன்னவர்கள் அழிந்தது போல நானும் அழிந்திருப்பேன்.

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: அதாவது எந்த நபர்களின் சாக்குப்போக்குகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்களோ, மேலும் எவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து சத்தியங்கள் செய்தனரோ மேலும், அன்னார் (ஸல்) எவர்களிடம் பைஅத் வாங்கி அவர்களுக்காக பாவமன்னிப்புக் கோரினார்களோ, அந்த நபர்களை விட எங்கள் மூவரின் விவகாரம் தாமதப்படுத்தப்பட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்கள் விஷயத்தை ஒத்திவைத்தார்கள்; இறுதியில் அல்லாஹ் இது குறித்துத் தீர்ப்பளித்தான். 'பின்தங்கிய அந்த மூன்று நபர்கள் மீது அவன் அருள் புரிந்தான்' என்று அல்லாஹ் குறிப்பிட்டது, நாங்கள் போரிலிருந்து பின்தங்கியதைக் குறிக்கவில்லை; மாறாக, அன்னாரிடம் வந்து சத்தியம் செய்து சாக்குப்போக்குச் சொன்னவர்களின் விவகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில்,

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram 5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

உண்மையைச் சொன்ன எங்களின் விவகாரம் தாமதப்படுத்தப்பட்டதையே குறிக்கிறது.

இப்போது நான் மூன்று மர்ஹூம்களின் நற்குறிப்பையும் கூறுவேன். அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்த வேண்டியுள்ளது. எனவே, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விவரித்த மீதமுள்ள பகுதிகளை இன்ஷா அல்லாஹ்! வரும் காலத்தில் எடுத்துரைப்பேன். மர்ஹூம்களின் நற்குறிப்பில் முதலாவது, ஜமாஅத்தின் முரப்பியாகிய ஹாஃபிஸ் முஹம்மது இப்ராஹீம் ஆபித் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் கடந்த நாட்களில் 72 வயதில் மரணமடைந்துள்ளார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

சக்குவாலுடைய ஒரு குதியில் இவர்கள் பிறந்தார்கள். 1967-ல் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் கையில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். மர்ஹூம் பிறவியிலேயே கண்பார்வையற்றவர். கிராமத்திலேயே திருக்குர்ஆனை மனப்பாடம் செய்தார். 1967-ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார். 1977-ல் ஷாஹித் டிகிரியுடன் அரபி ஃபாஸில் தேர்விலும் தேர்ச்சி பெற்றார். முரப்பி என்ற முறையில் இஸ்லாஹ்-வ-இர்ஷாதில் உள்ளூரிலும், பிறகு ஹிஃப்ஸ் பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. பிறகு, ஃபைசலாபாத் கிராமத்திலும் தொண்டாற்றினார். பிறகு, இந்தோனேசியாவில் இரண்டு ஆண்டுகள் முபல்லிஃக் ஆகவும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. இஸ்லாஹ்-வ-இர்ஷாத் மர்கஸிய்யாவிலும், பின்னர் விருந்தினர் மாளிகையில் முரப்பியாகவும் பணியாற்றினார். பார்வையற்றோர் சங்கத்தின் செயலாளராகவும் 2000-ல் இருந்தார். கிலாஃபத் நூலகத்திலும் தொண்டாற்றும் நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. பிரெய்லி மொழியையும் கற்றுக்கொண்டார். இவரது வகுப்புத் தோழர் இம்தாதுர் ரஹ்மான் ஸித்தீக்கி ஸாஹிப் என்பவர் பங்களாதேஷில் முரப்பியாக உள்ளார். அவர் கூறுகிறார்: ' ரப்வா ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நாங்கள் ஒன்றாக படித்தோம். ஹாஃபிஸ் ஸாஹிப் மிகவும் புத்திசாலி, அறிவாளி ஆவார். அவரின் நினைவாற்றல் மிகச் சிறந்தது. திருக்குர்ஆனின் ஒரு சிறிய பகுதியை ஓதிக் காட்டி, அது திருக்குர்ஆனில் எந்த பகுதியில் எந்த அத்தியாயத்தில் வருகிறது என்பதை கேட்டால், இந்த ஆயத் இன்ன அத்தியாயத்தின் ஆரம்பத்தில் அல்லது நடுப்பகுதியில் வருகிறது என்று ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுவார். ஜாமிஆவில் எது கற்றுக் கொடுக்கப்படுகிறதோ, ஆசிரியர் எதை கற்றுக் கொடுப்பாரோ அவை அவருக்கு நன்றாக நினைவிருக்கும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவர் மீது தனி பரிவு கொண்டிருந்தார்கள்; அதன் காரணமாகவே ஜாமிஆவில் அனுமதி கிடைத்தது. எவ்வித பள்ளிப் படிப்பு இல்லாவிட்டாலும் ஜாமிஆவில் சிறந்த கல்வி கற்றார். பிரச்சனை ஏதேனும் வந்தால் உடனடியாக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம் சென்று வழிகாட்டுதல் பெறுவார். ஹாஃபிஸ் ஸாஹிப் மீது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் பெரும் கருணை இருந்தது.

அதேபோல், ஹனீஃப் மஹ்மூத் ஸாஹிப் அவர்களும் மர்ஹூமைக் குறித்து நிறைய எழுதியுள்ளார்கள். அவற்றிலிருந்து சிலவற்றை எடுத்துரைக்கிறேன்: 'கூறுகின்றார்கள்: நான் ஒருமுறை ஏழரை ஆண்டுகளுக்குப் பிறகு ஆஃப்ரிக்காவிலிருந்து திரும்பியபோது, அவரது கையைப் பிடித்து அழுத்தினேன்; ஆனால், நான் எதுவும் பேசவில்லை. ஹாஃபிஸ் ஸாஹிப் உடனே என்னை அடையாளம் கண்டு என் பெயரைச் சொல்லி, 'எப்போது வந்தீர்கள்?' என்று கேட்டார். என் கையால் தொட்டதை வைத்தே என்னை அடையாளம் கண்டு கொண்டார்.

திருக்குர்ஆன் ஓதுவதில் தான் தவறு செய்யமாட்டேன் என்ற நம்பிக்கையும் ஹாஃபிஸ் ஸாஹிபுக்கு இருந்தது; அது உண்மையாகவும் இருந்தது.

பிறகு ஹனீஃப் ஸாஹிப் அவர்கள் இன்னொரு சம்பவத்தையும் எழுதுகிறார்கள்: இங்கு மாநாட்டிற்கு வந்தபோது என்னிடம், 'நான் உங்களைப் பார்த்துவிட்டேன்' என்று கூறினார். 'பார்வை இல்லாதபோது எப்படிப் பார்த்தீர்கள்?' என்று கேட்டதற்கு, 'புறக் கண்ணால் காண முடியாததை நான் அகக் கண்ணால் கண்டேன்' என்று கூறினார்.

அவரிடத்தில் பெரும் கலப்பற்ற தன்மையும், நன்றியுணர்வும் இருந்தது.

அதேபோன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நூல்களின் மேற்கோள்களும் அவருக்கு

மனப்பாடமாகத் தெரியும். இதைக் குறித்தும் சிலர் எழுதியுள்ளார்கள்.

ஏறக்குறைய 47 ஆண்டுகள் ஜமாஅத்துக்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. கிலாஃபத் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார். மனைவி, இரண்டு மகன்கள் மற்றும் நான்கு மகள்களை விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் அவருடன் கருணையுடனும் நடந்து கொள்வானாக! அவருக்கு மன்னிப்பு வழங்குவானாக! அவருடைய பிள்ளைகளுக்கும் பொறுமையையும் துணிவையும் வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு, லைபீரியாவில் ஜமாஅத்தின் முஅல்லிமாக இருந்த ஷேக் அபூபக்ர் ஜார்ஜ் ஸாஹிப் அவர்களுடையதாகும். இவர் கடந்த நாட்களில் 70 வயதில் உடல்நலக்குறைவால் காலமானார். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

கொஞ்ச காலமாக நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். 1980-ல் ஸிராலியோனில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார். உலக ரீதியாக நல்ல நிலையில் இருந்தார். ஓய்வுபெற்ற பிறகு, மார்க்கச் சேவை செய்ய வேண்டும் என்ற அசாதாரண உணர்வை அல்லாஹ் இவரது உள்ளத்தில் ஏற்படுத்தினான். முதலில் திருக்குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அந்த அளவுக்கு கிடையாது. 60 வயதில் குறிப்பான கவனம் செலுத்தினார். நல்ல உச்சரிப்புடன் திருக்குர்ஆனை ஓதுவதற்கு கற்றுக் கொண்டார். மீதமுள்ள வாழ்க்கையை மார்க்க சேவையில் கழிக்க உறுதி கொண்டார். இவர் வாழ்வை அர்ப்பணித்தவராக இல்லாதபோதிலும் செயல் ரீதியாக அவர்களை விடச் சிறப்பாகச் செயல்பட்டார். ஜமாஅத் பணியிலும், தப்லீக்கிலும் எப்போதும் முன்னணியில் இருந்தார். ஜமாஅத் சார்பாக ஓராண்டு அடிப்படைப் பயிற்சி பெற்று முஅல்லிமாக நியமிக்கப்பட்டார்.

2012-ல் அவரது சொந்த ஊரிலேயே முஅல்லிமாக நியமிக்கப்பட்டார். குறுகிய கால பயிற்சி பெற்றார். கான்தா (Ganta) நகரில் அவருக்குச் சொந்தமான வீடு உள்ளது. அதன் வளாகத்தில் சிறு பள்ளிவாசல் ஒன்றையும் கட்டினார்கள். மேலும், மார்க்கத் தொண்டாற்றிக் கொண்டே சென்றார்கள். அதேபோல், நிம்பா கவுண்டி (Nimba County) பகுதியின் முதல் முபல்லிஃக் என்ற பெருமையைப் பெற்றார். வஃபாத் வரையிலும் அங்கேயே தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார். கான்தாவில் பள்ளிவாசல் மற்றும் மிஷன் ஹவுஸுக்காகத் தனது சொந்த இடத்தை வழங்கினார். அங்கு தலைமையக பள்ளிவாசலும், மண்டல மிஷன் ஹவுஸும் கட்டப்பட்டுள்ளது. அதேபோன்று, மன்ரோவியாவின் (Monrovia) சுற்றுப்புறங்களிலும் ஓர் இடத்தையும், சிறிய வீட்டையும் ஜமாஅத்திற்கு வழங்கினார்.

மர்ஹூம் ஜமாஅத்துடன் எப்போதும் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வின் தொடர்பை கொண்டிருந்தார். முதுமை மற்றும் உடல் பலவீனம் இருந்தபோதிலும் கவுண்டியின் (County) தொலைதூரப் பகுதிகளுக்கு தொடர்ந்து சுற்றுப்பயணம் செய்து வந்தார். அதன் சாலைகள் பழுதுப் பார்க்கப்படாத சாலைகளாகவும், மிகவும் சிரமம் மிகுந்ததாகவும் இருக்கும். இவரின் தப்லீக் முயற்சியால் சில கிராமங்களும் அஹ்மதியத்தை ஏற்றன. தொழுகை, நோன்பு மற்றும் திருக்குர்ஆன் திலாவத் செய்தல் ஆகியவற்றை பேணக் கூடியவராக இருந்தார். முறையாக சந்தா செலுத்துபவர். ஏழைகளுக்கு உதவுவதிலும், பொருள் தியாகத்திலும் முன்னணியில் இருந்தார். நல்ல, கலப்பற்ற மனிதராக இருந்தார். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார். வஃபாத்தின் போது வஸிய்யத் கணக்கு கணக்கிடப்பட்டபோது 4 லட்சம் லைபீரியன் டாலர் அதிகமாகச் செலுத்தியிருந்தது தெரிய வந்தது. கிலாஃபத்துடன் ஆழமான தொடர்பு இருந்தது. இரண்டு மனைவிகள், மூன்று மகன்கள் மற்றும் இரண்டு மகள்களை விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ் அவருக்கு மன்னிப்பும் கருணையும் வழங்குவானாக! ஜமாஅத்துடன் நன்றியுணர்வின் தொடர்பை அவருடைய சந்ததிகளிலும் நிலை நாட்டுவானாக!

மூன்றாவது நற்குறிப்பு, ஸமீனா பன்னு சாஹிபா. இவர் லைபீரியாவில் வசித்து வந்த டாக்டர் ஃபஸ்ல் மஹ்மூத் பன்னு அவர்களின் மனைவி ஆவார். இவரும் கடந்த நாட்களில் வஃபாத் ஆனார். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் மவ்லானா அப்துல் ரஹீம் தர்த் ஸாஹிப் அவர்களின் மகள் வழி பேத்தி ஆவார். தர்த் ஸாஹிப் இங்கு யூ.கே-விலும் முபல்லிஃக் ஆக தொண்டாற்றியுள்ளார். மர்ஹூமா ரப்வாவில் பி.ஏ. முடித்து, லாகூர் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. அரபி படித்தார். ஏறக்குறைய 35 ஆண்டுகள் ஆஃப்ரிக்காவில் வாழ்க்கையை அர்ப்பணித்த தனது கணவருடன் எல்லாச் சவால்களையும் எதிர்கொண்டவாறு மிகவும் துணிவுடன் வாழ்ந்தார். எல்லா சூழ்நிலையிலும் உறுதியுடன் நின்றார். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அர்ப்பணிப்பின் எதிர்பார்ப்புகளை இன்முகத்துடனும், முழு மகிழ்ச்சியுடனும் நிறைவேற்றினார். மேலும், கணவன் மனைவியிடையிலான பந்தத்தில் நேசத்தையும், இணக்கத்தையும் உருவாக்குவதற்கு முயற்சி செய்தார். எப்போதும் குடும்ப உறவுகளை இணைப்பதில் பெரும் பங்காற்றினார் என்றும், மிகவும் நேசத்துடனும், அன்புடனும் ஒவ்வொருவருடனும் பழகுவார் என்றும் இவரின் நெருங்கிய உறவினர்களும் இவரின் சகோதரரின் மனைவியும் இவரைப் பற்றி எழுதியுள்ளார்கள்.

சமீனா ஸாஹிபாவின் கணவர் பிரான்ஸை சேர்ந்தவர். அவருடன் ஃபிரெஞ்சு டெஸ்க் இன்சார்ஜ் அப்துல் கனி ஜஹாங்கீர் சாஹிபுக்கு தொடர்பு இருந்தது. சமீனா ஸாஹிபாவுக்கு ஜஹாங்கீர் சாஹிபின் தாயாருடன் தொடர்பு இருந்தது. ஜஹாங்கீர் ஸாஹிப் கூறுகிறார்: 'டாக்டர் ஸாஹிபின் ஓய்வுக்குப் பிறகு பாகிஸ்தான் செல்வீர்களா? அல்லது கணவரின் ஊரான மொரீஷியஸ் செல்வீர்களா? என்று மர்ஹூமாவிடம் ஒருமுறை கேட்டேன். அதற்கு அவர், 'நான் ஆஃப்ரிக்கப் பெண்ணாகிவிட்டேன்; பாகிஸ்தானும் கிடையாது; ஃபிரான்சும் கிடையாது. எனக்கு ஆஃப்ரிக்கா பிடித்துள்ளது. நான் நிரந்தமாக இங்கேயே இருக்க விரும்புகிறேன்' என்று கூறினார். ஃபிரஞ்சு பேசக்கூடிய நாடுகளில் வசித்ததன் காரணமாக மர்ஹூமாவுக்கு ஃபிரஞ்சு மொழியிலும் புலமை இருந்தது. ஒரு முறை மர்ஹூமாவின் மாமியார், 'சமீனா எனக்கு மிகவும் பிடித்த மருமகள். ஏனென்றால், அவர் போதுமென்ற மனதுடையவர்; எப்போதும் குறை சொல்ல மாட்டார்' என்று என்னிடம் கூறினார்.

டாக்டர்கள் பொதுவாக பொருளாதார ரீதியாக நல்ல நிலையில் இருப்பார்கள். அவ்வாறிருந்தும் சில இடங்களில் அவர்கள் தம் பணியை துவங்கும்போது குறைந்த வருமானம் இருக்கும். சொற்ப வருமானத்தில் வாழ்வை கழிக்க நேரிடலாம். ஆனால், மிகப் பொறுமையுடனும், துணிவுடனும் தன் கணவருடன் துணை நின்றார்; குடும்பம் நடத்தினார். இவரின் கணவரும் மிகவும் நன்றியுணர்வுடன் தம் வக்ஃபை நிறைவேற்றினார்.

கலப்பற்றத் தன்மை குறித்த சம்பவம் என்னவென்றால்... இப்போது மகள் அவரது மகள் அனீலா டாக்டராகி விட்டார். அவர் வக்ஃப் செய்துள்ளார். ஹாஸ்பிடலில் தொண்டாற்றி வருகிறார். அந்த மகள் பள்ளிக்கூடத்திலிருந்து கிழிந்த பையுடன் வந்தபோது, மர்ஹூமா புதிய பை வாங்காமல், கொஞ்சம் பொறு; நானே அதைத் தைத்துக் கொடுக்கிறேன் என்றார். தன் கைகளால் அதைத் தைத்து கொடுத்தார்.

மர்ஹூமா மிகவும் எளிமையானவர்; ஐவேளை தொழுகையை கடைபிடிப்பவர்; எளிதில் பழகுபவர்; மிகவும் பரிவு காட்டுபவர், அனுதாபம் காட்டுபவர்; ஒவ்வொருவரையும் கருத்தில் கொள்பவர்; துஆ செய்யக் கூடியவர்; பொறுமைசாலி; நன்றியுணர்வுள்ளவர்; விருந்தோம்பல் செய்பவர்; மிகவும் தூய நடத்தையுடையவர்; ஏழைகளுக்கு உதவுபவர். ஆரம்பத்தில், முரப்பிகள் பர்கினா ஃபாஸோவுக்குச் செல்லும்போது, மர்ஹூமா அவர்களை மிகவும் கவனித்துக் கொண்டதாகவும், அவர்களின் உணவு போன்றவற்றிற்கான ஏற்பாடுகளை எப்போதும் செய்வார் என்றும் எழுதியுள்ளார்கள்.. கிலாஃபத் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அல்லாஹ்வின் அருளால் மூஸியாவாக இருந்தார். கணவர் மற்றும் ஒரு மகளை விட்டுச் சென்றுள்ளார்.

இவரது ஒரு சகோதரர் டாக்டர் மஹ்மூத் ஆத்திஃப் ஸாஹிப் ரப்வா ஃபஸ்லே உமர் ஹாஸ்பிடலில் பணியாற்றுகிறார். இன்னொரு சகோதரர் ஹாமித் மக்ஸூத் ஆத்திஃப் ஸாஹிப் ஜமாஅத்தின் முரப்பியாக உள்ளார்.

அல்லாஹ் மர்ஹூமாவுக்கு மன்னிப்பும் கருணையும் வழங்கி, உயர் பதவிகளை அளிப்பானாக!

இந்த மர்ஹூம்கள் அனைவருக்கும் தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழுகை நடத்தப்படும்! தமிழாக்கம்

முரப்பி A.P.A. தாரிக் அஹ்மது

*******

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

# ஜுமுஆ பேருரை

**தபூக் போரின் நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த வாழ்க்கை வரலாறு**

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது பரந்த கருணை மற்றும் பரந்த தன்னம்பிக்கை மற்றும் மன்னிக்கும் பண்பின் ஆகச் சிறந்த முன்னுதாரணம் என்னவென்றால், ஒவ்வொரு கட்டத்திலும் நயவஞ்சகர்களின் ஆபத்தான சதித்திட்டங்களை எதிர்கொண்டபோதிலும், அவற்றில் வேதனை, துன்பம் மற்றும் கொலை சதித் திட்டங்கள் ஆகியவை அடங்கும். மேலும், நயவஞ்சகர்கள் கையும் களவுமாகப் பிடிபட்ட போதிலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எப்போதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை மன்னித்துக் கொண்டே இருந்தார்கள்.அரசுக்கும், ஆட்சிக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்ட இடங்களில் மட்டுமே அவர்கள் தண்டிக்கப்பட்டனர்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 நவம்பர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **21ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**(சென்ற இதழின் தொடர்ச்சி......)**

மீதமுள்ள படை ஒரு பரந்த சமவெளிப் பாதை வழியாக பள்ளத்தாக்கின் அடிவாரத்தில் கடந்து செல்லுமாறு கூறப்பட்டது. பாதையை மாற்றிய இந்த திடீர் அறிவிப்பால், நயவஞ்சகர்களின் திட்டம் முடிவுக்கு வருவதாக தென்பட்டது. ஆனால், அவர்கள் தங்கள் தீய எண்ணத்தை செயல்படுத்துவதை விட்டும் பின்வாங்கவில்லை. அவர்கள் உடனடியாக பன்னிரண்டு அல்லது பதினைந்து பேரைத் தேர்ந்தெடுத்து, முகத்தை துணியால் மூடிக்கொண்டு, விரைவாக மலைப்பாதைக்குச் செல்ல முடிவு செய்தனர். ஏற்கனவே திட்டமிட்டபடி, திடீரென்று ஒட்டகத்தைப் விரட்ட ஆரம்பித்து, அதை பயமுறுத்தி பதற வைத்து, அதனால் அவர்கள் எதிர்பார்த்த அந்த விபத்து (அல்லாஹ் நம்மைக் காப்பானாக) ஏற்பட வேண்டும் என்று நினைத்தனர். அப்படியே அவர்கள் செய்தனர். அன்னார் (ஸல்) மலைப்பாதையில் சென்று கொண்டிருந்தபோது, மக்கள் நடமாடும் சப்தத்தை அன்னார் (ஸல்) கேட்டார்கள். அவர்கள் அன்னாருக்கு அருகில் வந்து அன்னாரது ஒட்டகத்தை பயமுறுத்தினர். இதன் காரணமாக, சில பொருட்கள் கூட கீழே விழுந்தன. எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்களை நோக்கி, 'இந்த நயவஞ்சகர்கள் மீது தாக்குதல் தொடுத்து விரட்டிவிடுங்கள்' என்று உத்தரவிட்டார்கள். ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் ஒரு தடியால் அவர்களின் வாகனங்களை அடிக்க ஆரம்பித்து, 'அல்லாஹ்வின் எதிரிகளே! விலகிச் செல்லுங்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சூழ்ச்சியைப் பற்றி அறிந்து கொண்டார்கள் என்று நயவஞ்சகர்கள் புரிந்து கொண்டனர். அவர்கள் அடையாளம் காணப்படாமல் இருக்க விரும்பியதால், அவர்கள் விரைவாக மலைப் பாதையிலிருந்து கீழே இறங்கி படைகளுடன் கலந்துவிட்டனர். ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் திரும்பி வந்தார்கள்.

ஹுதைஃபா! என் ஒட்டகத்தை அதன் பின்னால் இருந்து அடியுங்கள்.ஏனென்றால் அது பயந்துவிட்டது. அம்மாரே! நீர் அதன் முன்னால் இருந்து அதை ஓட்டுவீராக! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். இதனால், பதறிய ஒட்டகம் மீண்டும் சரியான பாதையில் வந்தது.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: நாங்கள் மலைப் பாதையை அடைந்தபோது, பன்னிரண்டு பேர் எங்களைத் தடுத்தனர். நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தபோது, அன்னார் (ஸல்) அவர்களை அச்சுறுத்தினார்கள். இதனால், அந்த நபர்கள் புறமுதுகுக் காட்டி ஓடிவிட்டனர். 'நீங்கள் அவர்களை அடையாளம் கண்டீர்களா? என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் கேட்டார்கள். அதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவர்கள் முகமூடி அணிந்திருந்ததாலும், இருந்ததாலும் நாங்கள் அவர்களை அடையாளம் காணவில்லை; ஆனால் அவர்களின் வாகனங்களை நாங்கள் அடையாளம் கண்டோம்' என்று கூறினோம். (அரேபியர்கள் தங்கள் வாகனங்களை நன்கு அறிந்திருந்தனர்). அப்போது, இந்த மக்கள் கியாமத் நாள் வரை முனாஃபிக்குகளாகவே இருப்பார்கள்; அவர்களின் நோக்கத்தை நீங்கள் அறிவீர்களா?' என்று அன்னார் (ஸல்) நபித்தோழர்களிடம் கேட்டார்கள். அதற்கு, இல்லை! எங்களுக்குத் தெரியாது' என்று அவர்கள் கூறினார்கள்.

'இந்த மலைப்பாதையில் அல்லாஹ்வின் தூதரைத் தாக்கி, அவரைத் தள்ளிவிட அவர்கள் நினைத்தார்கள்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒவ்வொரு சமுதாயமும் தமது ஆட்களின் தலைகளை தங்களிடம் அனுப்பட்டும்' என்று தாங்கள் அவர்களின் சமுதாயங்களுக்கு செய்தி அனுப்ப மாட்டீர்களா? என்று நாங்கள் கேட்டோம்.

அதாவது, அவர்களைத் தண்டிக்க வேண்டும்; கொல்ல வேண்டும் என்று கேட்டோம்.

இல்லை! முஹம்மது (ஸல்) தன் குலத்தாரைக் கொல்கிறார் என்று அரேபிய மக்கள் பேசிக்கொள்வதை நான் விரும்பவில்லை' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

சில அறிவிப்புகளின்படி, ரஸூல் (ஸல்) அவர்கள் தமது ஒட்டகத்தின் மீது இருந்தபோதே அன்னாருக்கு வஹீ வந்தது. ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் அருகிலேயே நின்று கொண்டிருந்தார்கள். யார் அங்கே?' என்று அன்னார் (ஸல்) அழைத்தார்கள். 'நான் ஹுதைஃபா' என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

நான் உங்களிடம் ஓர் இரகசியத்தை கூறப் போகிறேன்; அதை யாரிடமும் கூற வேண்டாம்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். பிறகு, அந்தத் தாக்குதல் நடத்தியவர்களில் ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டார்கள்.

மேலும், 'அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்துவதிலிருந்து தான் தடுக்கப்பட்டுள்ளேன்; ஏனெனில் அவர்கள் முனாஃபிக்குகள்' என்றும் அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்புகளின்படி, அன்னார் (ஸல்) பன்னிரண்டு, பதின்மூன்று அல்லது பதினைந்து பெயர்களைக் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த ரகசியத்தை யாரிடமும் கூற வேண்டாம் என்று ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டதால், அன்னார் (ரலி) ஒருபோதும் அந்தப் பெயர்களை யாரிடமும் கூறவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில், இந்தச் சம்பவத்திற்கு அவர் சாட்சி என்றும், பெயர்கள் அவருக்குத் தெரியும் என்றும் அவருக்குத் தெரியவந்தபோது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு முறையைக்



கையாண்டார்கள். யாருடைய மரணத்தின் மீதாவது அன்னாருக்கு சந்தேகம் ஏற்பட்டால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களின் கையைப் பிடித்து ஜனாஸா தொழுகைக்கு அழைத்துச் செல்வார்கள். தாக்குதலில் ஈடுபட்டவர்களில் யாரேனும் மரணமடைந்து, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு சந்தேகம் எழுந்தால், ஹஸ்ரத் ஹுஸைஃபாவை கையைப் பிடித்து ஜனாஸா தொழுகைக்கு அழைத்துச் செல்வார்கள். ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் மறுத்தால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அந்த நபர் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று புரிந்து கொண்டு, அன்னாரும் ஜனாஸா தொழுகைக்கு செல்ல மாட்டார்கள்.

ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஓர் அறிவிப்பின்படி, அவர்கள் பதினான்கு அல்லது பதினைந்து நபர்களாக இருந்தார்கள்.. மேலும், இதனுடன் ஒரு விளக்கமும் உள்ளது: பன்னிரண்டு பேர் இந்த சதியில் பங்கேற்ற நயவஞ்சகர்கள் ஆவர். மற்ற மூவரும் மலைப் பாதையில் ஏறிய ஸஹாபிகள் ஆவர். சமவெளிப் பாதையைப் பயன்படுத்துமாறு செய்த அறிவிப்பாளரின் அறிவிப்பை அவர்கள் செவிமடுத்திருக்கவில்லை. எனவே, அந்த மூன்று பேரும் குற்றமற்றவர்களாக கருதப்பட்டனர்.

எவ்வாறாயினும், மறுநாள் காலையில், அவ்ஸ் குலத்தின் தலைவரான ஹஸ்ரத் உஸைத் பின் ஹுழைர் (ரலி) அவர்கள் அன்னாரிடத்தில் வந்தார்கள். அப்போது, கடந்த இரவில் சில நயவஞ்சகர்கள் மலைப்பாதையில் தம்மை பின்தொடர்ந்து, இருட்டில் ஒட்டகத்தின் கயிறுகளை அறுத்து, அதன்மீது கூர்மையான பொருளால் குத்தி, அது வேகமாக ஓடி, தன்னை ஒட்டகத்திலிருந்து தள்ளிவிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்ததை ஹுஸூர் (ஸல்) அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்.

இதனால், ஹஸ்ரத் உஸைது (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த சதியில் பங்கேற்றவர்களைக் கொல்லுமாறு அனைத்து கோத்திரத்துக்கும் உத்தரவிடுங்கள் என்று விண்ணப்பித்து, உணர்ச்சிவசப்பட்டு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர்களை இப்படியே விட்டுவிடலாமா?; 'இவர்களிடம் எத்தனை நாட்களுக்கு நாம் மென்மையாக நடந்துகொள்வோம்? என்று கேட்டார்கள். மேலும், இன்று இவர்கள் (நயவஞ்சகர்கள்) எண்ணிக்கையில் குறைவாக உள்ளனர்; இழிவுபடுத்தப்பட்டுள்ளனர்; மேலும் இஸ்லாம் நிலைபெற்றுவிட்டது' என்றும் கூறினார்கள்.

அதற்கு, எனக்கும் இணை வைப்பாளர்களுக்கும் இடையே போர் முடிந்த பிறகு, முஹம்மது (ஸல்) தனது தோழர்களைக் கொல்லத் தொடங்கிவிட்டார் என்று மக்கள் பேசிக் கொள்வதை நான் விரும்பவில்லை என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உஸைத் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர்கள் தோழர்கள் இல்லையே?; இவர்கள் எங்களுடைய அல்லது தங்களின் தோழர்களாக எப்போது ஆனார்கள்?' என்று கேட்டார்கள்.

'அவர்கள் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று சாட்சி கூறுவதில்லையா?' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் உசைத் (ரலி) அவர்கள், 'நிச்சயமாக கூறுகிறார்கள்; ஆனால், அது அவர்களின் (உண்மையான) சாட்சி அல்ல' என்று கூறினார்கள்.

அதாவது, அவர்கள் வாயால் மட்டுமே கூறுகிறார்கள். அவர்களின் உள்ளத்தில் எந்த சாட்சியும் இல்லை.

அவர்கள் கலிமா ஷஹாதாவை ஒப்புக்கொள்கிறார்கள்; வாயினால் கூறுகிறார்களே!; எனவே, நான் அவர்களைக் கொல்ல மாட்டேன்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இன்றைய பெயர் தாங்கி ஆலிம்கள், கலிமா ஓதுபவர்களைக் கொல்ல வேண்டும் என்று தீர்ப்பு கொடுப்பவர்கள், இந்த போதனையை மனதில் கொள்ள வேண்டும்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: போர் ஒன்றும் நிகழவில்லை; முஹம்மது நபி (ஸல்) நலமுடன் திரும்பி வருகிறார்கள் என்று மதீனத்து நயவஞ்சகர்களுக்கு தெரிய வந்ததும், அவர்களது நயவஞ்சகமான திட்டங்களைப் பற்றிய ரகசியம் ஹஸ்ரத் நபி (ஸல்) (அலை) அவர்களுக்கு தெரிந்து விட்டது. மேலும் அநேகமாக நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள் மதீனாவுக்கு சிறிது தொலைவில் மிகவும் குறுகலான பாதையில் சிலரை அமர்த்தினார்கள். அதில் ஒருவர் பின் ஒருவராகவே செல்ல முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த இடத்திற்கு அருகில் வந்ததும் அல்லாஹுத்தஆலா அன்னாருக்கு அந்த விஷயத்தை அறிவித்து விட்டான்.

அதாவது வழிப்பாதையில் எதிரிகள் பதுங்கியுள்ளார்கள் என்று.

எனவே அன்னார் (ஸல்), ஒரு தோழரிடம் அங்கு சென்று பாருங்கள்! என்று கட்டளையிட்டார்கள். அந்த நபித்தோழர் சவாரி செய்தவாறு அங்கு சென்று பார்த்தபோது, அங்கு சிலர் மறைந்து இருப்பதைக் கண்டார்.

பல அறிவிப்புகள் உள்ளன. இதுவும் ஓர் அறிவிப்பாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அவர் சென்றதும் அந்த நபர்கள் அங்கிருந்து ஓடி விட்டனர். பின்னர், அந்த நபர்களை பின்தொடர்ந்து செல்வது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு உகந்ததாக தோன்றவில்லை.

அன்னார் (ஸல்) மதீனா சென்றடைந்தபோது, போரில் கலந்து கொள்ளாத நயவஞ்சகர்கள் பலவிதமான சாக்குப் போக்குகள் கூற ஆரம்பித்துவிட்டனர். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் நயவஞ்சகர்களின் உண்மைத்துவம் முஸ்லிம்கள் மத்தியில் வெளிப்படும் நேரம் வந்திருந்தது. ஆகவே கூறப்பட்டு விட்டது.

எவ்வாறு இருப்பினும் சிலருக்கு பின்தங்கியிருப்பதற்கு எண்ணம் இருந்தது; அல்லது முன்னேறி செல்வதற்கான எண்ணம் இருந்தது; அல்லது எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அவர்கள் திட்டம் தீட்டியிருந்தனர். இது குறித்து பல அறிவிப்புகள் உள்ளன. சம்பவம் ஒன்று தான்; எல்லா இடத்திலும். அதாவது அந்த குறுகலான மலைவழிப் பாதையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு துன்பம் இழைப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது ஏற்கனவே கூறப்பட்டு விட்டது போன்று, மக்கா வெற்றியடைந்த பிறகு, நயவஞ்சகர்களின் சதித்திட்டங்கள் மேலும் தீவிரமடைந்தன. அரேபியாவைச் சுற்றியுள்ள கோத்திரங்கள், யூத கோத்திரங்கள் உட்பட, தங்கள் பலத்தை இழந்து தோற்கடிக்கப்பட்டதைக் கண்டபோது, அரேபியாவிற்கு வெளியே உள்ள ரோமானிய பேரரசர் போன்ற வெளியேயுள்ள மற்றும் பெரிய சக்திகளிடம் உதவி கேட்க திட்டமிட்டனர். அதனுடன், மதீனாவில் ஒரு நிரந்தர மையத்தை உருவாக்கவும் திட்டமிட்டனர். அங்கு அவர்கள் நிரந்தரமாக தங்கள் கூட்டங்களை நடத்தலாம்; மேலும், இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக சதித்திட்டங்களை தீட்டலாம்; மேலும், ஆயுதங்களையும் சேமிக்கலாம். ஆனால், அந்த மையம் மற்ற முஸ்ிம்களுக்கு சந்தேகம் ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டனர்.

அபூ ஆமிர் என்ற ஒருவன் சில காலம் காணாமல் போயிருந்தவன், திடீரென மீண்டும் தோன்றினான். நயவஞ்சகர்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்பவர்கள் அவரை 'அபூ ஆமிர் மதகுரு என்று அழைக்கத் தொடங்கினர். இந்த ஒன்றுகூடும் மையத்திற்காக, குபாவில் ஒரு மஸ்ஜிதை கட்டும்படி அவன் பரிந்துரைத்தான்.

வரலாற்றுப் பதிவுகளில் அபூ ஆமிரைப் பற்றி மேலும் காணப்படுகிறது: அவன் அபூ ஆமிர் மதகுரு என்ற பெயரில் பிரபலமாக இருந்தான், மேலும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவன். முந்தைய குத்பாக்களிலும் இது பற்றி குறிப்பிடப்பட்டு விட்டது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த பிறகு, அபூ ஆமிர் மக்காவிற்குச் சென்று, நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகப் போர் செய்ய குரைஷியர்களைத்

தூண்டினான். மேலும், 'நான் உங்களுடன் இருக்கிறேன்; என் மக்கள் எனக்குக் கட்டுப்பட்டவர்கள்; நீங்கள் முஹம்மதுடன் போரிடும்போது, நாங்கள் உங்களுடன் வந்து இணைவோம்' என்று கூறினான். அவன் உஹது போரில் குறைஷியர்களுடன் இணைந்திருந்தான். இஸ்லாத்தின் முன்னேற்றத்தைக் கண்டு அபூ ஆமிர் மிகவும் கவலை அடைந்து, பொறாமையில் எரியத் தொடங்கினான். உஹது போர்க் களத்தின் நடுவில் அவன் குழிகளை வெட்டினான். அவற்றில் ஒன்றில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் விழுந்து பலத்த காயம் அடைந்தார்கள்.

உஹத் போர் தொடங்கியபோது, அபூ ஆமிர் தனது மக்களை அழைத்தான். 'கோத்திரத்தினரே! நான் அபூ ஆமிர் ஆவேன்' என்று அவன் கூறினான். ஆனால் அவர்கள் முஸ்லிம்களாகிவிட்டதால், பாவியே! உனக்கு எவ்வித வரவேற்பும் இல்லை' என்று அவர்கள், பதிலளித்தனர். அவர்கள் அவனைத் திட்டினர்; சபித்தனர். அதனால் அபூ ஆமிர், 'எனக்குப் பிறகு என் சமூகம் மிகவும் சீர்கெட்டுவிட்டது' என்று கூறினான். அதன் பிறகு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களை வெறுத்த அபூ ஆமிரின் கோத்திரத்தைச் சேர்ந்த பலர் மக்காவை நோக்கி சென்றுவிட்டனர். இந்த சம்பவம் ஒன்றே நிகழ்ந்தது.. அபூ அமீர் சென்றபோது முஸ்லிம்களாக ஆகி இருக்காத சிலரும் அவனுடன் சென்று விட்டார்கள். அவர்கள் சுமார் ஐம்பது பேர் ஆவர்.

அறிவிப்புகளில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அபூ ஆமிருக்கு எதிராக செய்த ஒரு துஆவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அவன் தனது சொந்த நாட்டிலிருந்து வெகு தொலைவில் தனிமையில் மரணமடைய வேண்டும் என்று துஆ செய்தார்கள்.

ஓர் அறிவிப்பில் உள்ளது., அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனா வந்தடைந்தபோது, அபூ ஆமிர் அவர்களைச் சந்தித்தான். அவன் 'முஹம்மதே (ஸல்)! நீங்கள் எதை நோக்கி அழைக்கிறீர்கள்?' என்று கேட்டான். அன்னார் (ஸல்), 'நான் உன்னை தீனே ஹனீஃபுக்கு அழைக்கிறேன்' என்று கூறினார்கள். அதாவது, நீ தேடுவதாகக் கூறும் அதே மார்க்கம் என்று கூறினார்கள். 'நீங்கள் இந்த மார்க்கத்தில் இருக்கிறீர்களா?' என்று அபூ ஆமிர் கேட்டான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'ஆம்! முற்றிலும்' என்று பதிலளித்தார்கள். பின்னர், அன்னார் (ஸல்), அவனை இஸ்லாத்தை ஏற்குமாறு அழைப்பு விடுத்தார்கள், ஆனால் அவன் மறுத்துவிட்டான். அவன் பொறாமைப்பட்டு அன்னாரை ஏசிபேசினான். அபூ ஆமிர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், நம்மில் எவர் பொய்யரோ அவரை அல்லாஹ் தனிமையிலும், நாட்டை துறந்த நிலையிலும் மரணமடையச் செய்யட்டும் என்று நக்கலாக கூறினான். அவன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுட்டிக்காட்டி அவ்வாறு கூறினான். அதற்கு, ஆம்! பொய்யனுக்கு அல்லாஹ் அவ்வாறே செய்வான்! என்று அன்னார் (ஸல்) பதிலளித்தார்கள்.

பின்னர், அபூ ஆமிர் தனது சமூகத்தினர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதிலிருந்து தடுத்தான்; மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டாம் என்று அவர்களை வலியுறுத்தினான். மறுபுறம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் அடையாளங்களும், அற்புதங்களும் நாளுக்கு நாள் வெளிப்பட்டுக் கொண்டே வந்தன. மேலும், அன்னாரை பின்பற்றுபவர்களின் எண்ணிக்கையும் தினம் தினம் அதிகரித்துக் கொண்டே வந்தது. குறிப்பாக அபூ ஆமிரின் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் இஸ்லாத்தில் இணைந்ததால், அபூ ஆமிர் மேலும் கோபமடைந்தான். அவன் நயவஞ்சகர்களுடன் சேர்ந்து ஒரு மஸ்ஜிதைக் கட்டினான். இது இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜிதே-திரார் என்று அழைக்கப்படுகிறது. அதன் மூலம் அவன் மக்களை ஒன்றுக் கூட்டி, அவர்களிடம் பேசி, அவர்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதிலிருந்து தடுக்கலாம் என்பதற்காக அவன் அவ்வாறு செய்தான்.

ஓர் அறிவிப்பின்படி, 'நீங்கள் ஒரு மஸ்ஜிதைக் கட்டுங்கள்; அதை உங்கள் இராணுவத் தளமாக மாற்றி, போருக்குத் தயாராகுங்கள்' என்று அபூ ஆமிர் தனது எண்ணத்தை ஒத்த ஆதரவாளர்களிடம் கூறினான். மேலும், 'நான் ரோமானிய மன்னனை சந்தித்து, ஒரு பெரிய படையுடன் வருகிறேன்; அதன் மூலம் முஹம்மது (ஸல்) மற்றும் அவரது தோழர்களை மதீனாவிலிருந்து வெளியேற்ற முடியும்' என்றும் அவன் கூறினான்.

எனவே அபூ ஆமிர் ரோமானிய அரசாங்கத்தை நோக்கிச் சென்றான், சிரியாவில் ரோமானிய மன்னன் கைஸரை சந்தித்தான். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிடுமாறு அவரைத் தூண்டிவிட முயன்றான். மேலும், 'இவர்கள் பலவீனமானவர்கள்; ஏழைகள் மற்றும் எண்ணிக்கையில் குறைவானவர்கள்' என்றும் கூறினான்; அவர்களுக்கு அதிகமான எதிரிகள் உள்ளனர். நீங்கள் அவர்களுக்குப் பயப்படத் தேவையில்லை' என்றும், 'நீங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் அது உங்கள் நாட்டிற்கு நல்லதல்ல' என்றும் கூறினான்.

ஹர்கல் அவனை தன்னுடன் தங்க அனுமதித்தான். மேலும், 'உனக்கு உதவப்படும்' என்று உறுதியளித்தான்.

இதற்கிடையில், விரைவில் நான் ஒரு பெரிய படையுடன் மதீனாவின் மீது படையெடுப்பேன்; எனவே, எனக்காக ஒரு சிறப்பு இடத்தை நீங்கள் கட்ட வேண்டும்' என்று அபூ ஆமிர் தனது மார்க்கத்தைச் சார்ந்த தீய நடத்தையுள்ள, சதிகார மக்களுக்கு நற்செய்தி அனுப்பினான்.

இந்த நோக்கத்திற்காக, நயவஞ்சகர்கள் குபாவில் ஒரு மஸ்ஜிதைக் கட்டினர். இந்த மஸ்ஜித் மஸ்ஜிதே திரார் என்று அழைக்கப்படுகிறது. ஆனால், இந்த ஆசையும் நிறைவேறவில்லை. இறுதியில், அபூ ஆமிர் சிரியாவிலேயே தனிமையிலும் நாட்டை விட்டு விலகிய நிலையிலும் மடிந்துபோனான்.(ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக அவன் செய்த துஆ, அவனுக்கே எதிராக திரும்பியது).

அவன் எப்போது இறந்தான்? என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் ஹிஜ்ரி 9 ம் ஆண்டு என்றும், சிலர் ஹிஜ்ரி 10 என்றும் கூறுகின்றனர். எவ்வாறாயினும், அவன் தனிமையில் இறந்தான்.

நயவஞ்சகர்கள் மஸ்ஜிதின் கட்டுமானத்தை முடித்த பிறகு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, அதில் தொழுகை நடத்துமாறு கோரினர். இறைவனது நுட்பமான ஞானம் எவ்வாறு அமைந்திருந்தது என்றால், அவர்கள் இந்த மஸ்ஜிதின் திறப்பு விழாவிற்கு வருமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டபோது, அன்னார் (ஸல்) தபூக் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் நோயாளிகள், ஏழைகள் மற்றும் மழை பொழியும் இரவுகளுக்காக ஒரு மஸ்ஜிதைக் கட்டியுள்ளோம்; தாங்கள் வந்து அதில் எங்களுக்காகத் தொழுகை நடத்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்' என்று அவர்கள் விண்ணப்பித்தனர். அதற்கு அன்னார் (ஸல்), நான் இப்போது பயணத்திற்கு மும்முரமாக தயாராகி கொண்டிருக்கிறேன். பயணத்திலிருந்து திரும்பி வந்ததும், அங்கே தொழலாம்' என்று கூறினார்கள்.

அன்னார் (ஸல்) தபூக் போரிலிருந்து திரும்பி வந்தபோது, மதீனாவுக்கு ஒருமணி நேர தூரத்தில் உள்ள ஸீ அவான் என்ற இடத்தில் முகாமிட்டபோது, நயவஞ்சகர்கள் கட்டிய அந்த மஸ்ஜிதைப் பற்றி இந்தக் குர்ஆன் வசனம் அருளப்பட்டது:

اَعُوذُ بِاللهِ مِنَ الشَّيطَانِ الرَّجِيمِ
وَالَّذِيْنَ اتَّخَذُوْا مَسْجِدًا ضِرَارًا وَّكُفْرًا
وَّتَفْرِيْقًا بَيْنَ الْمُؤْمِنِيْنَ وَاِرْصَادًا
لِّمَنْ حَارَبَ اللهَ وَرَسُوْلَهٗ مِنْ قَبْلُ ؕ
وَلَيَحْلِفُنَّ اِنْ اَرَدْنَاۤ اِلَّا الْحُسْنٰى ؕ
وَاللهُ يَشْهَدُ اِنَّهُمْ لَكٰذِبُوْنَ

பொருள்: தீங்கிழைக்கவும், நிராகரிப்பிற்கு உதவவும், நம்பிக்கையாளரிடையே பிரிவினை உண்டாக்கவும், அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் எதிர்த்து முன்னர் போராடியவருக்குப் பதுங்குமிடமாகவும் பள்ளிவாயில் ஒன்றைக் கட்டியவர்கள்; நாங்கள் நன்மையையே நாடுகிறோம் என்று

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 15 JAN 2026 Issue No. 3

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

நிச்சயமாக சத்தியம் செய்வார்கள். ஆனால் நிச்சயமாக அவர்கள் பொய்யுரைத்துக் கொண்டிருக்கின்றனர் என்று அல்லாஹ் சாட்சி பகர்கின்றான்.
( திருக்குர்ஆன் 9: 107 )

இந்த வஹீக்குப் பிறகு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மாலிக் பின் துஹ்ஷூம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மஅன் பின் அதீ (ரலி) ஆகியோரை அழைத்து, மஸ்ஜிதே திராரை இடித்துவிடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். வேறு சில அறிவிப்புகளில், ஹஸ்ரத் அஹ்ஸன் பின் அதீ, ஆமிர் பின் ஸகன், ஹஸ்ரத் ஹம்ஸாவின் கொலையாளியான வஹ்ஷி மற்றும் சுவைத் பின் அப்பாஸ் (ரலி) ஆகியோரையும் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இதற்காக அனுப்பியதாகக் கூறப்படுகிறது. ஷரஹ் ஸர்கானியில், அண்ணல் நபி (ஸல்) அவர்கள் முதலில் இருவரை அனுப்பியிருக்கலாம். பின்னர் அவர்களுக்கு உதவுவதற்காக மேலும் நான்கு பேரை அனுப்பியிருக்கலாம் என்று எழுதப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மஸ்ஜிதே திராருக்குச் சென்று, அதை இடித்து, தீயிட்டுக் கொளுத்தும்படி அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன் பிறகு, அவர்கள் அனைவரும் விரைவாக பனூ ஸாலிம் கோத்திரத்தை சென்றடைந்தனர். மேலும், நான் உங்களிடம் வந்து விடும்வரை காத்திருங்கள்‘ என்று ஹஸ்ரத் மாலிக் (ரலி) அவர்கள் தமது இரு தோழர்களிடம் கூறினார்கள். ஆக, அன்னார் வீட்டிலிருந்து காய்ந்த பேரீச்சம் மரக்கிளைகளுக்குத் தீ மூட்டி எடுத்துக் கொண்டு வந்தார்கள். பின்னர், அவர்கள் மக்ரிபிற்கும் இஷாவிற்கும் இடையில் மஸ்ஜிதே திராரை அடைந்து அதற்குத் தீ வைத்தனர். மேலும், அதைத் தரைமட்டமாக்கினர். மஸ்ஜிதைக் கட்டியவர்கள் அப்போது அங்கே இருந்தனர். ஆனால், தீ வைக்கப்பட்டவுடன் அவர்கள் வெவ்வேறு திசைகளில் ஓடிவிட்டனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது, அந்த இடத்தை ஹஸ்ரத் அஹ்ஸன் பின் அதீ (ரலி) அவர்களுக்குக் கொடுத்து, அதை அவர் தமது வீடாக்கிக் கொள்ள விரும்பினார்கள். ஆனால், இது குறித்து அல்லாஹ் அருள வேண்டியதை அருளிவிட்டான்; நான் இந்த இடத்தில் வீடு கட்ட விரும்பவில்லை; மேலும், எனக்குத் தேவையும் இல்லை; நீங்கள் இதை ஹஸ்ரத் ஸாபித் பின் அக்ரம் (ரலி) அவர்களுக்குக் கொடுங்கள்; ஏனெனில் அவரிடம் வீடு எதுவும் இல்லை‘ என்று கூறி ஹஸ்ரத் அஹ்ஸன் பின் அதீ (ரலி) அவர்கள் மன்னிப்புக் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அந்த இடத்தை ஹஸ்ரத் ஸாபித் பின் அக்ரம் (ரலி) அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

இப்னு இஸ்ஹாக் மஸ்ஜிதே திராரைக் கட்டிய நயவஞ்சகர்களின் பெயர்களையும் கூறியுள்ளார். அவர்கள் பன்னிரண்டு நபர் ஆவர். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது பரந்த கருணை மற்றும் பரந்த தன்னம்பிக்கை மற்றும் மன்னிக்கும் பண்பின் ஆகச் சிறந்த முன்னுதாரணம் என்னவென்றால், ஒவ்வொரு கட்டத்திலும் நயவஞ்சகர்களின் ஆபத்தான சதித்திட்டங்களை எதிர்கொண்டபோதிலும், அவற்றில் வேதனை, துன்பம் மற்றும் கொலை சதித் திட்டங்கள் ஆகியவை அடங்கும். மேலும், நயவஞ்சகர்கள் கையும் களவுமாகப் பிடிபட்ட போதிலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எப்போதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை மன்னித்துக் கொண்டே இருந்தார்கள். அரசுக்கும், ஆட்சிக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்ட இடங்களில் மட்டுமே அவர்கள் தண்டிக்கப்பட்டனர். மேலும், அந்த அச்சுறுத்தல் நீங்கும் அளவிற்கு மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டது. இல்லையெனில், கடுமையான தண்டனைகள் வழங்கப்படவில்லை, ஆனால் வழங்கியிருக்க முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவூத் (ரலி) அவர்கள் நயவஞ்சகர்களின் நடத்தையைப் பற்றிக் குறிப்பிடுகையில் இவ்வாறு கூறுகிறார்கள்: நயவஞ்சகர்கள் தொழுகை என்ற சாக்கில் ஒன்றுகூடி நயவஞ்சக ஆலோசனைகளைச் செய்ய கட்டிய குபாவின் மஸ்ஜிதை இடித்துவிட வேண்டும்; மேலும், அவர்கள் முஸ்லிம்களின் மற்ற மஸ்ஜிதுகளில் தொழுகை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட வேண்டும் என்று அல்லாஹ் தனது தூதர் (ஸல்) அவர்களுக்கு வஹீ மூலம் கட்டளையிட்டான். இவ்வளவு பெரிய தீமை இருந்தபோதிலும், அவர்களுக்கு உடல் ரீதியான அல்லது நிதி ரீதியான எந்தத் தண்டனையும் வழங்கப்படவில்லை. (உண்மையை அறிந்திருந்தும்).

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மதீனா மற்றும் அன்ஸார்கள் மீதான அன்பின் வெளிப்பாடு பற்றிய குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது.

சுமார் இரண்டு மாத பயணத்திற்குப் பிறகு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். மதீனா மற்றும் அதன் மக்கள் மீதான அன்னாரது அன்பு இவ்வாறு வெளிப்பட்டது: அன்னார் (ஸல்) மதீனாவின் குடியிருப்பை முதலில் பார்த்தபோது,.

هٰذِهِ طَابَةُ، وَهٰذَا أُحُدٌ، جَبَلٌ يُحِبُّنَا وَنُحِبُّهُ

என்று கூறினார்கள்.

பொருள்: இது தாபா ஆகும். அதாவது மதீனாவுக்கு தாபா என்ற ஒரு பெயரும் உள்ளது. அதாவது தூய்மையான மற்றும் சிறந்த இடம் என்று பொருள். இது உஹது மலையாகும் .இது நம்மை நேசிக்கிறது, மேலும், நாம் அதனை நேசிக்கிறோம்.

அதாவது, மதீனாவின் ஒவ்வோர் இடத்தின் மீதும் அன்னார் (ஸல்) அன்பு கொண்டிருந்தார்கள். மேலும், உஹது போரின் போது ஸஹாபிகள் தங்கள் ரத்தத்தால் எழுதிய நன்றியுணர்வு மற்றும் அர்ப்பணிப்பின் சம்பவங்களை அன்னார் (ஸல்) ஒருபோதும் மறக்கவில்லை.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ‘நான் விரைவாக மதீனா செல்ல வேண்டும்; எனவே, என்னுடன் விரைவாக வர விரும்புகிறவர் விரைவாக வரலாம்‘ என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு, ‘அன்ஸாரின் சிறந்த வீடுகளை உங்களுக்கு நான் சொல்லட்டுமா?‘ என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, நிச்சயமாக! என்று ஸஹாபிகள் கூறினர்.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....)

தமிழாக்கம்
முரப்பி
முஹம்மது சுல்தான் மைதீன்

** ****** *

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad